திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

ஸ்ரீ வனதுர்க்கை அம்மன், தருமபுரம்

மாலை 8] பராபவ சித்திரை—மே 1966 [மணி 8

சென்னை அரசாங்க அறநிலையப்

தருமபுரம் ஆதீனத்திற்குரிய திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் கோயிலில் நிகழ்ந்த ''ஆலயத்தூய்மைப் பரிசளிப்பு விழாவில்'' தஞ்சைத் துணை ஆணையாளர் அவர்களும், உதவி ஆணையாளர் அவர்களும், கலந்துகொள்ளுதல், (4-4-66).

பொருள் அடக்கம்

1. அரும் பெறல் மரபிற் பெரும் பெயர்
2. விடை தெரியுமா?
3. விடை விளக்கம்
4. சிவஞான போதச் சிறப்பு
5. சிவஞான போதத் தெளிவுரை
6. திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு
7. திரு இயமகத் திருப்பதிகம் உரை
8. இராமலிங்கரும் சன்மார்க்கமும்
9. மதிப்புரைகள்
10. சிவலாயப் பரிவார மூர்த்திகள்
11. சங்கற்ப நிராகரணம்
12. திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சி
13. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34''** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துவிடுதல் இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

MAY 1966

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] பராபவ சித்திரை-மே [மணி 8

"அரும்பெறல் மரபிற் பெரும்பெயர்"

முன்னுரை :

'அரும்பெறல் மரபிற் பெரும்பெயர்' என்னும் அழகிய தொடர், திருமுருகாற்றுப்படையில் **நக்கீரர்** அருளிச் செய்தது. பெயர்களின் சிறப்பை நயமுற விளக்குவது. "பெயரில் என்ன இருக்கிறது? 'சிலத்தாமரை' (Rose) என வழங்கப் பெறுவதனை, நாம் வேறொரு பெயராற் குறிப்பிடினும், அஃது இனிய நறுமணமே கமழும்" என "ரோமியோவும் ஜூலியத்தும்" என்னும் நாடகத்தில் **செகப்பிரியர்** பாடுகின்றார். ஆயினும் சிலசில பெயர்களுக்கு ஏதோ ஒரு தனிப்பெருமை இயல்பாக அமைந்து விடுகின்றது! அவற்றினையே நாம் **மந்திரங்கள்** எனப் பெரிதும் போற்றுகின்றோம்.

காந்தியடிகள் எல்லாச் சமயங்களையும், எல்லாக் கடவுளரையும் சமநோக்குடனேயே அன்புடன் போற்றிப் பாராட்டி வந்தனராயினும், அவருக்கு **இராமன்** என்னும் நாமத்தில் இயல்பாகவே ஒரு வகைப் பற்றுதல் இருந்தது! பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமானையே, "**சிவன்** எனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி அம்மான்" எனத் திருநாவுக்கரசர் சிறந்தெடுத்துரைக்கின்றார்; "**சிவன்** எனும் ஓசை அல்லது உலகில் திருநின்ற செம்மை யுளதே?' எனவும் வியந்து வினவுகின்றார். ஆசிரியர் நக்கீரரோ, முருகனை "அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருகன்" எனப் பாடிப் பரவுகின்றார்!

பெயரின் முதன்மை :

பெயர்களுக்குள்ள பெருமை பெரிது! வினைச்சொற்களை "இலக்கண ஆசிரியர்களின் படிமம்" (Grammarians' idol) என ஓர் அறிஞர் (P. B. Ballard) குறிப்பிடுகின்றார். அம்முறை பற்றிக் கூறலுறின், பெயர்ச் சொற்களை, 'இலக்கண ஆசிரியர்களின் தெய்வம்' (Deity) என்றே கூறலாம். ஒரு மொழியில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமே உயிர்ப்புடைய பகுதிகள் என்பது மொழிநூலோர் (Philologists) கருத்து. ஆதல் பற்றியே, ஆசிரியர் தொல்காப்பியனார் "சொல்லெனப் படுப பெயரே வினை என்று, ஆயிரண்டென்ப அறிந்திசினோரே" என மொழிந்தருளினர். அவர் வினைச் சொற்களிலும் பெயர்ச்சொற்களுக்கே முதன்மை தந்துள்ளமை கருதற்பாலது.

ஒவ்வொரு பெயர்க்கும் தனித்தனியே ஒரு குறிப்பிட்ட பண்பு இருப்பதாகப் பழங்கால மக்கள் நம்பி யிருந்தனர். தாம் அடைய விரும்பும் பண்புகளுக்கு ஏற்ற பெயர்களை வைத்துக் கொள்ளும் பழக்கம் இன்றும் மக்களிடையே இருந்து வருகின்றது. ஒருவரின் பெயரை மற்றொருவர் வைத்துக் கொள்வதனுல் அவரது பண்புகளைத் தாமும் பெறலாம் என மக்கள் கருதினர். அதனுல் பாட்டனின் பெயரைப் பேரனுக்கு வைத்து வழங்கும் பழக்கம், உலகெங்கணும் தொன்றுதொட்டுப் பல மொழியாளரிடையிலும் பயின்று வந்துள்ளதென ஆட்டோ எஸ்பர்ஸன் (Otto Jesperson) என்னும் அறிஞர் விளக்குகின்ருர். கடவுளரின் பெயர்களை வைத்து வழங்குவதும் இக்கருத்துப் பற்றியே. சில சில மக்கட் குழுவினருள் தத்தம் தலைவனின் பெயரை மற்றவர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது எனத் தடைகளும் விதிக்கப்பட்டிருந்தன. தலைவன் மாறுந்தோறும் பெயர்களைப் பற்றிய தடைவிதிகளும் அவர்களிடையே மாறிக்கொண்டு செல்லுமாம். பெயர்களுக்கு ஒருவகை மந்திர சக்தி இருப்பதாகப் பழங்கால மக்கள் உறுதியாக நம்பி யிருந்தனர். தம்முடைய பெயரை மற்றவர்கள் தெரிந்து கொண்டால் அதனைக் கொண்டு, தமக்கு ஏதேனும் தீங்கு விளைவித்து விடுவார்கள் என்ற பயம் பண்டைய மக்களுக்கு இருந்தது. ''ஊரைச் சொன்னுலும் பேரைச் சொல்லாதே'' என்று இன்றும் வழங்கி வருவதை நாம் கேட்கின்ருேம்.

பெயரிடும் முறைகள்:

ஒருவருக்குப் பெயர் இடுவதிற் பலதிற வகைகள் உண்டு. வறுமையினுல் வாடும் பெற்ருேர்கள் தம் குழந்தையாவது வறுமையின் கொடுமையில் இருந்து தப்பி வாழ்தல் வேண்டும் என விரும்பிச் **'செல்லப்பன்'** **'கோடீசுவரன்'** எனப் பெயர்கள் வைப்பதுண்டு. இங்ஙனம் வைக்கப்படும் பெயர்கள் அதற்கு மறுதலையாக முடிவதும் இயல்பே. அதனை விளக்குதற்கு இனிய நல்ல எடுத்துக்காட்டு **'உமாயூன்'** என்னும் மொகலாய அரசனின் பெயராகும். **'உமாயூன்'** என்ருல் அதிருஷ்டசாலி என்பது பொருள். ஆயினும் அவரைப்போன்ற துரதிருஷ்டசாலிகளான அரசர்கள் மிகச் சிலரேயாவர்.

ஒருசில பெற்ருேர்கள் தம் குழந்தைகளுக்கு நேர்ந்த பிறவிக் குறைபாடுகள் குறித்து வருந்தி அவற்றின் நிறைவையுணர்த்தும் பெயர்களை வைத்துப் பரிவுடன் வழங்குவர். **கண்ணிற்** பழுதடைந்த தமது பிள்ளைக்குக் **'கண்ணப்பன்'** எனப் பெயர் வைத்தார் ஒரு சைவத்—தமிழ்த் தந்தையார்! நோயினுல் மெலிந்து வருந்தும் தம் குழந்தை உடல்நலம் பெருகி வாழ்தல் வேண்டும் என விரும்பி, **ஆரோக்கியசாமி** என்று அன்புடன் பெயர் அமைப்பர் சில பெற்ருேர்கள். இங்ஙனம் பலமுறைகள் உண்டு. அதிவீரராம பாண்டியன்—வரதுங்கராம பாண்டியன் ஆகிய இருவருக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தவரும், பரங்கிரிப்புராணம் பாடியவரும், சிவஞானசித்தியார் சுபக்கம் திருவருட்பயன் என்னும் சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை வரைந்தவரும் ஆன **நிரம்ப அழகிய தேசிகர்** இத்தகையதோர் எதிர்மறை இலக்கண முறையில், (Lucus a non lucendo) ''நித்த மணாளர் நிரம்ப அழகியர்'' என்னும் திருவாசகத் தொடரால் பெயரிடப் பெற்றவரே என்று சான்ருேர்கள் கூறுவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கல்வியறிவு சிறிதும் பெருத திண்ணனுரைக் **''கலைமலிந்த கண்ணப்பர்''** எனவும், கண்ணொளியிழந்தவராய் இருந்த தண்டியடிகளை **''நாட்டமிகு தண்டி''** எனவும், சூழ்ச்சியினுற் கொலையுண்டு தோல்வி எய்திய மெய்ப்பொருள் வேந்தரை **''வெல்லுமா மிகவல்ல** மெய்ப் பொருள்'' எனவும் சிறப்பித்துப் போற்றியிருக்கும் திறமும் பிறவும் ஈண்டைக்கு உணரத்தகுவனவாம்.

பெயர்களுக்கும், அவைகுறிக்கும் பொருள்களின் தன்மைக்கும் ஏதோ ஓர் இயைபு உண்டு என மக்கள் நம்பினர். செயிண்ட் **தாமஸ் அக்விஞஸ்** என்பவர்,

"பொருள்களின் இயற்கைத் தன்மைகட்கு ஏற்பவே அவற்றின் பெயர்கள் இருத்தல் வேண்டும் (The names must be in accordance with the nature of things) என வலியுறுத்திக் கூறுவார். அஃது இந்நாளிற் பெரும்பாலும் பொருந்தி வர வில்லை. ஆயினும் **புகழனூர், மாதினியார், மருள்நீக்கியார், புனிதவதியார், திலக வதியார், அருண்மொழித் தேவர்** போன்ற பழந்தமிழ்ப் பெயர்கள், அவர் களின் இயல்பான சிறந்த பண்புகளுக்கு ஏற்ப அமைந்து திகழ்ந்தமை கருதற் பாலது.

பெயரறிய ஆர்வம் ;

மேலும், ஒரு பொருளின் பெயரைத் தெரிந்து கொள்வது, அப்பொருளைப் பெறுதற்கும், அதன்மீது ஆட்சியுரிமை செலுத்துதற்கும் வாய்ப்பளிக்கும் (To know the names of things, in fact, is to hold them in one's power) என மனிதமனம் முன்னுளில் கருதியது. பொருள்களின் பெயர்களை அறிந்து கொள்ளும் வேட்கையானது, பொது வாக இன்றும் எல்லா மக்களிடையிலும் இயற்கையாக அமைந்து கிடப்பதனை நாம் பலதுறைகளிலும் காணலாம். "முன்னம் அவனுடைய **நாமம்** கேட் டாள்" எனவும் "...பிறைபாளன் **திரு நாமம்** எனக்கொருகால் பேசாயே" என வும், "இன் னும் பாடுக பாட்டே! அவர் நன்னெடுங்குன்றம் பாடிய பாட்டே!" எனவும் தமிழிலக்கியங்களில் வரும் பலப் பல பாடல்கள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும். **ஆர்லண்டோ** என்பவன், **ரோசலிண்ட்** என்னும் தன் காதலியின் பெயரை, காட்டில் மரங்களிலெல்லாம் செதுக்கி வைத்த (As You Like It) கதை யினை நாம் நன்கறிவோம்.

திருவாரூர்ப் பூங்கோயிலில் "கற்பகத் தின் பூங்கொம்போ! காமன்றன் பெரு வாழ்வோ!" எனத் தக்க ஓர் அம்மை யாரை நற்பெரும்பான்மை கூட்ட **நம்பியாரூரர்** காண்கின்றார்; 'என் மனங் கொண்ட இவ்விளங்கொடிதான் யார்?' என வினவுகின்றார்! அதற்கு அன்று அங்கு அவர் முன் நின்றார் "அவர், நங்கை பரவையார்" எனக் கூறினர். **பரவை யார்** என்னும் பெயரைக் கேட்ட அளவில், நம்பியாரூரர் நனிமிக மகிழ்ந்தார். பரவை-பரவை என அப்பெயரையே பல காற் சொல்லிச் சொல்லி இன்புற்று, அவ்வம்மையாற்'பாற் கழிபெருங் காதல் கொண்டார். சுந்தரர் கொண்ட காத லுணர்வின் மன நிலையினை, ஆசிரியர் சேக்கிழார் அழகோவியமாகப் புனைந்து நமக்குக் காட்டுகின்றார்,

"பேர்பரவை! பெண்மையினிற்
 பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை! அணிதிகழும்
 மணிமுறுவல் அரும்பரவை!
சீர்பரவை ஆயினாள்!
 திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை! இடைப்பட்ட
 என்ஆசை எழுபரவை!"

எனவரும் பெரியபுராணச் செய்யுள். அவர்தம் காதல் மனநிலையைக் கவினுறப் படம் பிடித்துக் காட்டுகின்றது! பரவை என்னும் பெயரினைச் சுந்தரர், பலகாற் கூறிப் பரவசம் அடைந்து மகிழ்ந்தமை யினை உள்ளவாறுணர்த்த, இச்செய்யுளில் பலமுறை 'பரவை' என்னும் சொல் திரும்பத் திரும்ப வருமாறு சேக்கிழார் திறம்படப் பாடியிருக்கும் சிறப்பு, மிக வும் போற்றற்பாலது. அதுபற்றியே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், இப்பாட்டில் **பரவை** என்னும் சொல் ஏழுமுறை வந்திருத்தலை எண்ணிப் பார்த்து இன்புற்று, 'ஒரு தூக்கில் **எழு கடல்** நிறுத்தோன்' என இரட்டுற மொழிதலாகச் சேக்கிழாரைப் பாராட் டிப் புகழ்ந்தார்.

பெயரும் நட்பும்:

இனி, நட்புணர்வின் உரிமை மிகுதி யால் நண்பனின் பெயரையே தம் பெய ராகக் குறித்துக் கொள்ளுகின்ற அன் புரிமைத்திறம் விளக்கும் வியத்தகு செய்தியும்,

" இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே!
தன்பெயர் கிளக்குங் காலை, 'என்பெயர்
பேதைச்சோழன்! 'என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்!"

எனவரும் புறநானூற்றுப் பாடலாற் புலனாகின்றது. இத்தகு நட்பின் அருமைப் பெற்றியினை நினைக்குங்கால், "அண்டமோர் அணுவாம் பெருமை கொண்டு. அணுவோர் அண்டமாம் சிறுமை கொண்டு, அடியேன் உண்ட ஊண் உனக்கு ஆம்வகை எனது உள்ளம் உள் கலந்து எழு பரஞ்சோதி' என்னும் திருவிசைப்பா, நம்மனோர் நினைவிற்கு இயைபுபற்றிப் போந்து இன்புறுத்துகின்றதன்றோ?

இவ்வாறே மற்றொரு செய்தியும் இங்கு உணரத்தக்கது. பிற்காலச் சோழ வேந்தர்களுள் முதலாம் **குலோத்துங்கன்** (கி. பி. 1070—1120) மிகவும் சிறந்தவன். அவனுக்குப் 'பண்டித சோழன்' என ஒரு பெயர் உண்டு. அவனது அன்பிற்கும் நண்பிற்கும் உரியராக விளங்கிய புலவர்களுள் **செயங்கொண்டார்** என்பவர் ஒருவர். குலோத்துங்கன் கலிங்கப்போர் நிகழ்த்தி வெற்றி பெற்று மகிழ்ச்சியுடன் இருந்தபோது, அவனை அப்புலவர் காணச் சென்றார். அவரைக் கண்டு மகிழ்ந்த குலோத்துங்கன், 'இப்போது யானும் உம்முடைய பெயரைப் பெற்று விட்டேன். எனக்கும் **செயங்கொண்டான்** (வெற்றி பெற்றவன்) என்ற பெயர் உரியதாகி விட்டது' என்று நயம்படக் கூறித் தன் அன்பை அவருக்குப் புலப்படுத்தினான். அவன்றன் நயவுரைக்கு மகிழ்ந்த புலவர், 'அங்ஙனமாயின் செயங்கொண்டான் என்னும் அரசர் ஆகிய தங்கள் வெற்றித் திறனைச் செயங்கொண்டான் என்னும் புலவன் ஆகிய யான்புகழ்ந்து பாடக் கடமைப் பட்டுள்ளேன்' என்று கூறினார். அதன் விளைவே **கலிங்கத்துப் பரணி** என்னும் நலஞ்செறிந்த நூல் என்பது வரலாறு. இனைய பல செய்திகள் பெயர்களின் அருமையும் உரிமையும் விளக்கும் பெற்றியினவாதல் காணலாம்.

பழந்தமிழ்ப் பெயர்கள்;

சங்க காலப் புலவர்களின் பெயர்க் காரணங்களை ஆராய்ந்தால், பலதிறச் சுவைமிக்க கருத்துக்களை நாம் அறிந்து மகிழலாம். சைவப் பேரறிஞர் சாத்தூர்க் கந்தசாமி முதலியார் அவர்கள், உயிரின் இலக்கணம் விளக்கும் கருத்துடன், **"ஐயூர் மூலங்கிழார்"** என்னும் சங்க காலப்புலவரின் பெயரைத் தற்குறிப்பேற்றமாகத் தலைப்பெய்து வழங்கியுள்ளார். ஆன்மாவானது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம் என்னும் பஞ்ச கோசங்களைக் கொண்டு விளங்குகின்றது. ஆதலின், அவ்வுண்மையினைச் சுவை மிகக் குறிப்பிடும் முறையில், சங்ககாலப்புலவர்களுள் ஒருவரின் பெயரினை எடுத்து, ஆன்மாவை ஐயூர் மூலங்கிழார் என வழங்கி மகிழ்கின்றார் அவர்!

இம்முறையில் ஏகாம்பரநாதர்—காமாட்சியம்மை என இந்நாளில் வழங்கி வரும் திருப்பெயர்களையே சங்ககாலப் புலவர்களின் பெயர்கள் ஆகிய **மாமூலனார்—காமக்கண்ணியார்** என்னும் சொற்கள் பொருத்தமுறக் குறிப்பிடுகின்றன என்று நினைத்துணரும் பொழுது, நமக்கு எத்துணைப் பெரிய இன்பம் உண்டாகின்றது.

அங்ஙனமே மீனாட்சியம்மை என்னும் திருப்பெயரினையே, **கயற்கண்ணி** எனக் கவின்மிகு தமிழில் ஞானசம்பந்தர்,

" அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே"

என்னும் தேவாரப் பாடலில் தெளிவுறக் குறித்துள்ளார். இதனைச் சிந்தித்துணருங்கால் நம் சிந்தை களிக்கின்றதன்றோ? பரஞ்சோதி முனிவர் மீனாட்சியம்மை என்பதனை **'மீன நோக்கின் மடவரல்**, என்றும் சிவகாமவல்லி என்பதனைத் **'தன் ஆனந்தக் கொடி'** என்றும்

தமிழாக்கிக் குறிப்பிட்டுள்ளமையும் ஈண்டு அறிந்துகொள்ளத்தக்கது.

பெயர் விளக்கம்.

தமிழ் நூல்களுள் கலித்தொகை என்பது ஒரு சிறந்த நூல். 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை' என அது புகழப் பெற்றுள்ளது. சங்ககால நூல்களைச் சேர்ந்த அதன்கண் **திருதராஷ்டிரன்** என்னும் பெயர் குறிப்பிடப் பெற்றுள்ள முறை மிகவும் சுவை வாய்ந்தது. திருதராஷ்டிரன் குருடன். ஆதலின் அவனை மற்றவர்கள் காண முடியுமே அன்றி, அவன் மற்றவர்களைக் காண இயலாது. அவன் ஒருவகையிற் கண்ணாடி போன்றவன். கண்ணாடியை மற்றவர்கள் காண முடியுமேயன்றி, அது மற்றவர்களைக் காணவல்லதன்று. இவ்வியல்பு விளங்கத் திருதராஷ்டிரனுக்கு **முகுரானனன், தர்ப்பணானனன்** என்று பெயர்கள் வழங்கும் (முகுரம் - கண்ணாடி. தர்ப்பணம் – கண்ணாடி. ஆனனம் – முகம்). கண்ணாடி தன் முன் வரும் பொருளின் உருவினை மருவக் காட்டிடும் ஒளியுடைய பொருள் ஆதலின், அதனைத் தமிழில் 'வயக்குறு மண்டிலம்' என்பர். எனவே, **கபிலர்** எனும் சங்ககாலப் புலவர்,

> " வயக்குறு மண்டிலத்து
> வடமொழிப் பெயர்பெற்ற
> முகத்தவன் ......"

எனத் திருதராஷ்டிரனைக் குறிப்பிட்டருள்கின்றார். இம்முறையினை ஒட்டி, கிரவுஞ்ச மலையை அழித்த முருகனைப் பரிபாடல் என்னும் சங்ககால நூல், **"குருகு** பெயர்க் குன்றம் கொன்றோன்" என வழங்குகின்றது. கம்பர் **அசகாய சூரன்** என்பதனைக் "கூட்டொருவரை வேண்டாக் கொற்றவன்" எனப் பாடியுள்ளார். இவை போன்ற பெயர் வழக்காறுகள் ஆராயுந்தோறும் எத்துணை இலக்கியச் சுவை பயக்கின்றன!

பெயரின் ஆற்றல்:

பெயருக்குள்ள இத்தகைய பெருமைகளை யெல்லாம் விளக்குதற்கே, அதனை "அரும்பெறல் மரபிற் பெரும் பெயர்" எனச் சான்றோர் பண்டே அதனைச் சிறப்பித்துரைத்தனர் போலும்! **ஜே. வெண்ட்ரியே** என்னும் மொழி நூலறிஞர், பெயர்ச்சொற்கள் பற்றி விளக்கி வருங்கால், நோயின் கூறுகளை நுனித்தாய்ந்து அதன் **பெயர்** இன்னது எனத் தெளிந்து, மருத்துவர் ஒருவர் கூறிவிட வல்லுநராயின், அஃதொன்றே நோயாளியின் அச்சமும் கவலையும் நீக்கி ஆறுதல் அளித்து நோயைப் போக்கி விடக்கூடும் என்கின்றார் (4). இக்கருத்தை மெய்ப்பிக்க அதர்வண வேதத்திலிருந்து மேற்கோள் ஒன்றையும் அவர் காட்டுகின்றார்.

நாம மந்திரம்.

இஃதொருபுறம் இருப்பச், சில சமயங்களில் நோயாளிகளின் நோய் தணியப் பிறவற்றைக் காட்டிலும், மருத்துவர்களின் பெயர்ப் பெருமையும் சிறந்ததொரு காரணமாக அமைகின்றது என்பதனையும் நாம் பலகாற் கண்டுணர்ந்து வருகின்றோம். அவ்வுண்மையினை ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஓரிடத்திற் செவ்விதின் உணர்த்தியருள்கின்றார். பாண்டியன் வெப்புநோய் கண்டு வருந்துகின்றான். சமணர்கள் மருங்கு சூழ்ந்து, நோயின் மூலநெறி அறியாமல், "காவாய் அருகனே! என்றென்றோதி, மருத்துவங்கள் புரிகின்றனர். ஆயினும் நெய் சொரிந்த தழல் போலப் பாண்டியனின் வெப்புநோய் மிகுகின்றதே யன்றித்

---

(4) "To know the name of the evil is half the cure. Let us not smile at these primitive beliefs. They are still in force to-day, since we believe in the importance of the diagnosis when it is expressed in words. 'I suffer a great deal with my head, Doctor'—it is *Cephalalgia*! 'My digestion is bad'—it is *Dyspepsia*! In actual fact, the doctor is content to substitute for a usual and commonplace word that all his patients understand; they experience relief directly when they learn that the specialist knows by name the occult evil that causes their suffering."

—*J. Vendryes, Language.*

தணியவில்லை. அதனால் அவர்களை நோக்கி அரசன் "ஒருவரும் இங்கு இருமருங்கும் இராதுபோம்" எனச் சினந்து மொழிந்து உணர்வு சோர்ந்து விழுந்தான். அந் நிலையிற் **குலச்சிறையார்,**

"காயமும் மனமும் மாசு கழுவுதல்
செய்யார் செய்யும்
மாயமும் இந்த நோயை வளர்ப்பதே!
வளர்வெண் திங்கள்
மேய வேணியர்பால் ஞானம் பெற்றவர்
விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே அன்றிப் பிறவியும்
தீரும் என்றார்".

உணர்வு சோர்ந்து உயிர் தடுமாறும் பாண்டியனின் செவிகளில், சிறந்த ஒரு மருத்துவரின் பெயரை மெல்லெனச் சொல்லியவுடனே, அதுகேட்ட அளவில் அவன் சோர்வு நீங்கி உணர்வு பெற்று இன்புறுகின்றான். நோயின் கொடுமையும் ஓரளவு தணிகின்றது. இந்நிலைமையினை,

"மீனவன் செவியின் ஊடு மெய்யுணர்
வளிப்போர் கூற,
ஞானசம் பந்தர் என்னும் நாமமந் திரமும்
செல்ல,
ஆனபோ தயர்வு தன்னை அகன்றிட........

எனப் பெரிய புராணத்திற் சேக்கிழார் விளக்கிப் பாடியிருத்தல் காணலாம்.

அருளாளர் பெயர்கள்.

இங்ஙனமே திருநாவுக்கரசர், நம்பியாரூரர் என்னும் அருளாளர்களின் பெயர்களும் மந்திரச் சிறப்பும் ஆற்றலும் வாய்ந்தனவாக விளங்குகின்றன. அவைகள் தம்மை வழுத்தினரைக் காக்கும் பேராற்றல் மிக்க பெற்றிமை சான்றவை என்பது உணரற்பாலது. **அப்பூதியடிகள்** தவம் செய்யத் தலைப்படவில்லை; தீயிடை நின்று தியானிக்கவில்லை; வெறும் நீரை மட்டுமே உணவாகக் கொண்டு கடினமான விரதங்களைக் கடைப்பிடிக்கவில்லை. **திருநாவுக்கரசு** என்னும் பெயரை இடைவிடாமற் கூறியும், எழுதிவைத்துமே, எய்தற்கரிய வீடு பேற்றை எய்தினர்,

உற்றான் அலன்தவம்; தீயில் நின்றான்
அலன்; ஊண்புனலா
அற்றான் அலன் நுகர்வும்;
திருநாவுக் கரசு எனும் ஓர்
சொற்றான் எழுதியும் கூறியுமே
என்றும் துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி
என்னும் பெருந்தகையே.

இவ்வாறே கூறுமான் மும்மை நாயன்மார்களுள் ஒருவரான **பெருமிழலைக் குறும்பர்** என்பவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளையே தம்முடைய கண்கண்ட தெய்வமாகக் கருதி வழிபட்டார். அவருடைய திருப்பெயர் ஆகிய நம்பியாரூரர் என்பதனையே மந்திரம் என்று கொண்டு வழுத்தினர். **நம்பியாரூரர்** என்னும் நாம மந்திரத்தினையே நயந்தினிது ஓதி, இடைவிடாமல் தியானித்து வழிபட்டார். அதனால் அவர் அணிமா மகிமா கரிமா லகிமா முதலிய அட்டமாசித்திகளையும் அடையப் பெற்றார். இறையருளுக்கு உரியவராய் வீடுபேறு எய்தினர்.

நாளும் நம்பி யாரூரர்
நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி
சித்தி எல்லாம் அணைந்ததற்பின்
மூளும் காதல் உடன்பெருக
முதல்வர் நாமத் தெழுத்தஞ்சும்
கேளும் பொருளும் உணர்வுமாம்
பரிசு வாய்ப்பக் கெழுமினர்

இன்னோரன்ன செய்திகள் பலவும், அரும்பெறல் மரபிற் பெரும் பெயர்களின் மாண்பினை, மலையிலக்கெனத் தெளிவுறப் புலப்படுத்துகின்றமை காண்க.

முடிவுரை.

இதுகாறும் கூறியவாற்றால், பெயர்களுக்கு உள்ள சிறப்பும் ஆற்றலும் பற்றி, ஓரளவேனும் உணரலாம். பெயர்களின் ஆற்றலும் சிறப்பும் உணர்ந்தே, **பெரியாழ்வார்** தம்முடைய திருப்பதிகம் ஒன்

றில், மக்களுக்குக் கடவுளரின் பெயர்களை வைப்பதுதான் மிகவும் சிறப்புடையது என்று வற்புறுத்திப் பாடியுள்ளார்.

காசும் கறையுடைக் கூறைக்கும்
அங்கோர் கற்றைக்கும்

ஆசையி னால்அங்கு அவத்தப்
பேரிடும் ஆதர்காள்

கேசவன் பேர்இட்டு நீங்கள்
தேனித்து இருமினோ...... (381)

மானிட சாதியில் தோன்றிற்றோர்
மானிட சாதியை

மானிட சாதியின் பேரிட்டால்
மறுமைக்கு இல்லை...... (384)

மண்ணிற் பிறந்து மண்ணாகும்
மானிடப் பேரிட்டு அங்கு

எண்ணம்ஒன் றின்றி இருக்கும்
ஏழை மனிசர்காள்...... (387)

நம்பி பிம்பி என்று நாட்டு
மானிடப் பேர்இட்டால்

நம்பும் பிம்பும் எல்லாம்
நாலு நாளில் அழுங்கிப்போம்... (388)

கடவுளின் திருநாமத்தைக் கற்றால், நம்முடைய குற்றங்களெல்லாம் நீங்கும்; இழிவுகள் எல்லாம் ஒழியும், நம்மை அடக்கி ஆண்டு வரும் பொறி புலன்களை, அடக்கி ஆளலாம். கலியின் கொடுமைகள் நம்மை நலியாதபடி, நாம் அவற்றை மிக எளிதாகக் கடக்கலாம். நாம் அஞ்சி நடுங்குதற்குரிய நமன் தமர்களும், நமக்கு அஞ்சி நடுங்குவார்கள். நாம் அவர்களின் தலைகள் மீது அடிவைத்து நடந்து, அவர்களை வெற்றிகொண்டு பெருமிதம் கொள்ளலாம். இவ்வுண்மையினை,

காவலிற் புலனை வைத்துக்
கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து

நாவலிட் டுழிதர் கின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே;

மூவுலகு உண்டு உமிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற

ஆவலிப் புடைமை கண்டாய்
அரங்கமா நகரு ளானே

எனவரும் தொண்டரடிப் பொடி ஆழ்வார் திருப்பாடலும் வற்புறுத்துதல் காணலாம். ஆதலின் நாம் அனைவரும் கடவுளின் பெயர்களைப் பலகாற் கூறி வழுத்தியும், நம்முடைய மக்களுக்கு வைத்து வழங்கியும் மகிழ்ந்து, நலம்பெற்று உய்வோமாக!

—ஆசிரியர்.

இறைவனின் பெயரையே யன்றி, அவன்றன் அருளுக்குரிய சான்றோர்களின் பெயர்களையும், நம் பிள்ளைகளுக்கு வைத்து வழங்கி வருதல், பெருநலம் பயப்பதாகும். ஈசூர்ச் சச்சிதானந்த சுவாமிகள் என்னும் சான்றோரின் பெயரினையே தமக்குத் தம் தந்தையாரால் இடப்பெற்று, அவ்வாற்றால் அவர் போலவே சமய வுணர்வில் தலைசிறந்து விளங்கி வருபவரே சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் ஆவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவாகத் தமக்கும் அவர் பெயரே இடப்பெற்று, அப்பெயரிடப் பெற்ற பெற்றிமைக்கு ஏற்பத் தமிழறிஞர் உலகில் தலைசிறந்து விளங்கி, மதுரைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராகவும் நியமிக்கப்பெறும் மாட்சிமையுற்றுத் திகழ்கின்றார், பேராசியர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்! சைவசித்தாந்த சண்டமாருதம் எனப் பெரும்புகழ்வாய்ந்து விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகர் அவர்களைப் போலவே இக்குழந்தையும் சிறந்து விளங்கித் திகழ்தல் வேண்டும் என விரும்பிப் பெயரிடப் பெற்று, அங்ஙனமே பிற்காலத்தில் கலைபலவும் பயின்று நலம்பலவும் அமைந்து சிறந்து விளங்கியிருந்தவர், பேராசிரியர் திரு. ச. சோமசுந்தர பாரதியார்!

சான்றோர்களின் திருப்பெயர்களை, அவர்தம் பண்பு நலங்களின் சிறப்பறிந்து வியந்து, அவ்வுணர்வு நலம் உள்ளத்தே அழுந்தித் தோன்றப் பிள்ளைகளுக்குப் பெயர் வைத்து வழங்கி, அவ்வுணர்வையும் செவ்விதின் முறையாக வளர்த்து வந்தால், அப்பிள்ளைகளும் பிற்காலத்தில், அச்சான்றோர்களின் குணநலங்களில் ஒரு சிறிதேனும் அடையப் பெற்றுச் சிறந்து விளங்குவர் என்னும் உண்மையை யுணர்தற்கு, இன்னோரன்னபெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் சான்று பகர்தல் காணலாம்.

—ஆசிரியர்.

விடை தெரியுமா?

1. "தாண்டக வேந்தர்" என்பவர் யார்? 'தாண்டகம்' என்பது யாது? யார் யார் தாண்டகப் பாடல்கள் பாடியுள்ளனர்?

2. 'ஆணை நமது என்ன வல்லான்' என்னும் தொடரை அருளிச் செய்தவர் யார்? அது யாரைக் குறிக்கும்? காரணம் என்ன?

3. "உரைசேரும் எண்பத்து நான்கு நூறுபிரமாம் யோனி பேதம், நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்கு உயிராய் அங்கங்கே நின்றான்" என இறைவனைக் குறிப்பிடுபவர் யார்? 8400000 யோனி பேதங்கள் யாவை?

4. 'கற்பம்—அநுகற்பம்—உபகற்பம்—அகற்பம்' என்பன யாவை? அவற்றின் இயல்புகளை விளக்குக.

5. தேவியைச் சேவித்துச் சூழ்ந்து நின்று, தொண்டு புரிந்துகொண்டிருக்கும் பதினாறு பெண் சத்திகள் யார் யார்? அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

6. 'நந்தியால்' என்பது என்ன? அதற்கு அப்பெயர்வரக் காரணம் யாது?

7. நவ நரசிம்ம மூர்த்திகளும் எழுந்தருளி விளங்கும் தலம் யாது? அதற்குரிய தமிழ்ப் பெயர் என்ன?

8. 'காஞ்சி பூர்ணர்' என்பவர் யார்? அவர் அருளிச் செய்த ஆறு வார்த்தைகள் யாவை?

9. 'தூப்புல்' என்பது யாது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன? அங்குத் திருவவதாரம் செய்தருளிய பெரியார் யார்? அவர் அருளிச் செய்த தமிழ் நூல்கள் யாவை?

10. "பஞ்சாசார்ய பதாச்ரிதர்" என்பது யாருக்கு உரிய சிறப்புப் பெயர்? அப் பெயர் அமைந்த பொருத்தத்தை விவரிக்க.

[விடை மறுபக்கம் காண்க]

விடை விளக்கம்

(1) 'தாண்டக வேந்தர்' என்பது திருநாவுக்கரசர்க்கு வழங்கப்பெறும் சிறப்பியற்பெயர், 'தாண்டகம்' என்பது தொல்காப்பியச் செய்யுளின்படி எண்சீரான் வந்த கொச்சக ஒருபோகு என்னும் செய்யுள் ஆகும். அடிதோறும் நான்காம் சீரும் எட்டாஞ்சீரும் தேமாவாக நிற்ப, மூன்றாஞ் சீரும் ஏழாஞ்சீரும் பெரும்பான்மை தேமாவாகவும், சிறுபான்மை புளிமாவாகவும் அமைய, ஏனைய ஒன்று இரண்டு ஐந்து ஆறும் சீர்கள் பெரும்பாலும் காய்ச் சீர்களாகவும், சிறுபான்மை மாச்சீர் விளச்சீர்களாகவும் வருதல், தாண்டகம் என்னும் பாவின் இலக்கணம் ஆகும்,

எண் சீரான் வரும் தாண்டகப் பாக்களில், அடிதோறும் மூன்று நான்கு ஏழு எட்டாம் சீர்களை விலக்கி விட்டு, ஏனைய நான்கு சீர்களையும் இணைத்து நோக்கினால், அப்பாடல் கொச்சகக் கலிப்பா என்னும் செய்யுள் வடிவில் அமையும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஒற்றும் குற்றுகரமும் நீக்கி, 4 எழுத்து முதல் 20 எழுத்து ஈறாக வகுத்துரைத்த 17 நிலத்து 5 வகை யடிகளிலும், கழிநெடில் அடிக்கு உரிய மேல் எல்லையாகிய 20 எழுத்து என்னும் வரையறையைத் தாண்டி, இருபதின் மேற்பட்ட எழுத்தால் மிக்கு வருதலின், இப்பாடல்கள் தாண்டகம் எனக் காரணப் பெயர் பெற்றன.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருமங்கை யாழ்வாரும் திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்பனவற்றை அருளிச் செய்துள்ளார்.

'தாண்டகம்' என்னும் வடமொழிச் செய்யுள் வகையினை அடியொற்றிப் பிற்காலத்தவரால் பாடப் பெற்று, யாப்பருங்கல விருத்திபுரையில் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ள தாண்டகச் செய்யுட்கள், தேவாரத்திலும் திவ்வியப் பிரபந்தத்திலும் அமைந்து விளங்கும் திருத்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்னும் பாடல்களுக்கு வேறானவையாகும்.

திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகங்கள், கழிநெடில்அடிக்கு மேல் எல்லையாகிய 20 எழுத்து என்னும் அளவினைத் தாண்டி, 27 எழுத்திற்கு உட்பட்டு வருவன ஆகும். யாப்பருங்கல விருத்தியுரையில், தண்டகம் என்னும் வடமொழிச் செய்யுள் இலக்கணப்படி வரும் செய்யுட்கள், 27 எழுத்து முதலாக அவற்றின் மிகுந்த பல எழுத்துக்களைக் கொண்டனவாகும். இவை இரண்டு வகைக்கும் உள்ள வேறுபாடு இது. 'தாண்டகம்' என்பது 'தண்டகம்' என்னும் சொல்லின் தத்திதாந்தப் பெயர்.

(2) "ஆணை நமது என்ன வல்லான்" என்னும் தொடரை அருளிச் செய்தவர் **நம்பியாண்டார் நம்பிகள்**. பதினொன்றும் திருமுறையில், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில்,

> "முத்திப் பகவ முதல்வன் திருவடியை
> அத்திக்கும் பத்தர்எதிர் ஆணைநமது என்னவல்லான்"

என வருதல் காணலாம். இத்தொடர், **திருஞானசம்பந்தர்** பெருமானைக் குறிக்கும்.

திருவெண்காடு, திருப்பிரமபுரம், திருநனிபள்ளி ஆகிய தலங்களின் திருப்பதிகங்களிலும், கோளறு பதிகத்திலும், திருஞான சம்பந்தப் பெருமான் முறையே பின்வருமாறு ஆணையிட்டுப் பாடியிருத்தலை நினைந்து வியந்து, இங்ஙனம் நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்டுச் சிறப்பித்தருளியுள்ளார்.

1. "சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே"

— திருவெண்காடு

2. "வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற்கு ஆணையும் நமதே"

— திருப்பிரமபுரம்

3. "இடுபறை ஒன்ற அத்தர் பியன்மேல் இருந்து
இன்னிசையால் உரைத்த பனுவல்
நடுஇருள் ஆடும் எந்தை நனிபள்ளி
உள்க வினைகெடுதல் ஆணை நமதே"

4. "ஆன சொன்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"

— கோளறு பதிகம்

(3) "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம் நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" என இறைவனைக் குறிப்பிடுபவர் **திருஞான சம்பந்தர்.**

உரைசேரும் எண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்,
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்கோயில்,
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட,
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள் கையேற்கும் மிழலையாமே.

உயிர்கள் 84 லட்சம் வகைப்படும் என்பதனைச் சமய நூல்கள் பலவும் கூறுகின்றன.

"ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனி எண்பான்
ஆரவந்த நான்குநா றாயிரத்துள்......"

— கந்தர் கலிவெண்பா.

தோற்றியிடும் அண்டசங்கள், சுவேதசங்கள், பாரில்
துதைந்துவரும் உற்பீசம், சராயுசங்கள், நான்கின்;

ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்பது; என்றும்
ஊர்வ பதினைந்து; அமரர்பதி னொன்றோடு; உலவா

மாற்றருநீர் உறைவனநற் பறவைகள் நாற்காலி
மன்னியிடும் பப்பத்து; மானிடர்ஒன் பதின்மர்;

ஏற்றிஒரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரம்என் றெடுத்தே

— சிவப்பிரகாசம்

ஊர்வ பதினொன்றும்: ஒன்பது மானுடம்:
நீர்பறவை நாற்கால்ஓர் பப்பத்து:—சீரிய
பந்தமாம் தேவர் பதினான்கு: அயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து

—வளையாபதி

உயிர்கள் நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு லட்சம் என்பர். அதற்குரிய விளக்கம் வருமாறு:—

1.	அண்டசம்	—	முட்டையிற் பிறப்பன	நால்வகைத் தோற்றம்.
2.	சுவேதசம்	—	வியர்வையிற் பிறப்பன	
3.	உற்பீசம்	—	விதையினின்று பிறப்பன	
4.	சராயுசம்	—	கருப்பையினின்று பிறப்பன	

1.	நிற்பன (தாவரம்)	— 19000	எழுவகைப் பிறப்பு
2,	நடப்பன (விலங்கு, நாற்காலி)	—100000	
3.	ஊர்வன	—150000	
4.	நீர்வாழ்வன	—100000	
5.	பறப்பன	—100000	
6.	மானிடர்	—900000	
7.	தேவர்	—110000	
		840000	

(4) கற்பம் அநுகற்பம் உபகற்பம் அகற்பம் என்பன திருநீற்றின் வகைகள். **கற்பம்** என்பது, நோயில்லாதனவும், கன்றை ஈன்று அணிமையானவும் ஆக உள்ள பசுக்களின் சாணத்தினைச் சத்தியோசாத மந்திரத்தினால் கீழே விழாமல் ஏற்று, சிவமந்திரங்களால் உண்டாக்கப்பட்ட சிவாக்கினியில் இட்டு, இறைவனைத் துதித்து எடுத்த தூய திருநீறு ஆகும். **அநுகற்பம்** என்பது, காட்டில் விழுந்து உலர்ந்த பசுச் சாணத்தைக் கொண்டு வந்து பொடியாக்கி, பசுவினது தூய கோசலத்தை விட்டுப் பிசைந்து, அத்திர மந்திரத்தினாலே உருண்டையாகப் பிடித்து ஓமத்தீயில் இட்டுச் சிறப்புற வெந்த பின்னர்க் கொள்ளும் திருநீறு ஆகும். **உபகற்பம்** என்பது, பசுக்கள் மேயும் காடுகளில் மரங்கள் உராய்தலினால் உண்டாகிய தீயினாலே வெந்தனவும், பசுக்கள் தங்கும் இடங்கள் தீப்பற்றிக் கொண்டதனால் வெந்தனவும், செங்கற்களைச் சுட்ட தீயினால் உண்டாகியனவும் ஆகியவற்றை ஒன்று சேர்க்காமல், தனித் தனியே உரிய மந்திரங்களினால் கோசலம் விட்டுப் பிசைந்து உருண்டையாகச் செய்து திருமடங்களில் விளங்கும் சிவாக்கினியினால் முறைப்படி நீற்றப்பட்டதாகும்.

கருநிறம் செந்நிறம் புகைநிறம் முதலியன அமைந்த திருநீறும், மேற்குறித்த வகைகளில் அடங்காதனவும், முறைப்படி அமைக்கப்படாதனவும் ஆகிய குற்றம் பொருந்திய திருநீறு **அகற்பம்** எனப்படும். இதனை நாம் அணிதல் ஆகாது.

கன்று ஈனாத கிடாரி, ஈன்று பத்து நாட்களுக்கு உட்பட்ட பசு, நோயுடையது—கன்று இறந்தது—கிழத்தன்மை யடைந்தது—மலட்டுத்தன்மை வாய்ந்தது—மலம் தின்பது ஆகிய பசுக்களின் சாணத்தினால், திருநீறு செய்தலாகாது.

அம்பலத்தே உலகுய்ய ஆடும் அண்ணல்
உவந்தாடும் அஞ்சினையும் அளித்த ஆக்கள்
இம்பர்மிசை அநாமயமாய் இருந்த போதில்
ஈன்றணிய கோமயம் மந்திரத்தினால் ஏற்று

உம்பர்தொழ எழும்சிவமந் திரஓ மத்தால்
உற்பவித்த சிவாங்கிதனில் உணர்வுக் கெட்டா
எம்பெருமான் கழல்நினைந் தங்குஇட்ட தூநீறு
இதுகற்பம் என்றெடுத்திங்கு ஏத்தல் ஆகும். (1)

ஆரணியத் துலர்ந்தகோ மயத்தைக் கைக்கொண்டு
அழகுற நுண் பொடியாக்கி ஆவின் சுத்த
நீர்அணிவித்து அத்திரமந் திரத்தி னாலே
நிசயமுறப் பிடித்தோம நெருப்பில் இட்டுச்
சீரணியும் படிவெந்து கொண்ட செல்வத்
திருநீறும் அவகற்பம் தில்லை மன்றுள்
வாரணியும் முலையுமையாள் காண ஆடும்
மாணிக்கக் கூத்தர்மொழி வாய்மை யாலே. (2)

அடவிபடும் அங்கியினால் வெந்த நீறும்
ஆனிலைகள் அனல்தொடக்க வெந்த நீறும்
இடவகைகள் எரிகொளுவ வெந்த நீறும்
இட்டிகைகள் சுட்டஎரி பட்ட நீறும்
உடனன்றி வெவ்வேறே ஆவின் நீரால்
உரைதிகழும் மந்திரங்கொண் டுண்டை யாக்கி
மடம்அதனிற் பொலிந்திருந்த சிவாங்கி தன்னால்
வெந்ததுமற்று உபகற்பம் மரபின் ஆகும். (3)

(5) தேவியைச் சேவித்துச் சூழ்ந்து நின்று, தொண்டு புரிந்து கொண்டிருக்கும் பெண்சத்திகள், பதினாறு பேர்கள் என நூல்கள் கூறுகின்றன. அவர்களின் பெயர்கள் முறையே வருமாறு:—

1. மாலினி
2. மோகினி
3. யோகினி
4. போகினி
5. வீணி
6. பராயணி
7. கபாலினி
8. கபாலயோசனி
9. அற்புதை
10. விந்தை
11. அங்கிதை
12. வங்கிதை
13. வாசலை
14. மாயி
15. வராகி
16. நாரணி

சில நூல்களிற் பின்வருமாறும், மேற்குறித்த சத்திகளின் பெயர்கள் கூறப்படுகின்றன.

1. ஜயை
2. விஜயை
3. அசிதை
4. பராசிதை
5. நிவிருத்தி
6. பிரதிட்டை
7. வித்தியை
8. சாந்தி
9. இந்திகை
10. தீபிகை

11.	ரோஸிகை	14.	அனந்தை
12.	மோஷிகை	15.	அனாதை
13.	வியோமரூபை	16.	அனாஸ்ததை

(6) 'நந்தியால்' என்பது ஒரு சிறந்த தலம். கர்நூல் மாவட்டத்தில் உள்ளது. இந்தியாவிலேயே மிகப் பெரிய நந்தி இங்கேதான் உள்ளது. தஞ்சைப் பெரிய கோயில் நந்தி, இதற்குச் சிறியதே யாகும். 'நந்தி ஆலயம்' என்னும் பெயரே நந்தியால் என மருவி வழங்குகின்றது. இங்கே பத்து மைல் சுற்றளவுக்குள் நவநந்திகள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் முறையே வருமாறு:

1.	பத்ம நந்தி	6.	சூர்ய நந்தி
2.	நாக நந்தி	7.	விஷ்ணு நந்தி
3.	விநாயக நந்தி	8.	சோம நந்தி
4.	கருட நந்தி	9.	சிவ நந்தி
5.	பிரம்ம நந்தி		

(7) நவ நரசிம்ம மூர்த்திகள் எழுந்தருளி விளங்கும் தலம் அஹோபிலம் என்பதாகும். இத் தலத்திற்குரிய தமிழ்ப் பெயர் சிங்கவேள் குன்றம் என்பது. இதனைத் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். ஸ்ரீ இராமாநுஜரால் ஏற்படுத்தப் பெற்ற 74 சிம்மாசனாதிபதிகளுள் ஒருவராகிய ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திர மகாதேசிக ஜீயர் சுவாமிகளின் திருமடம் இங்கே அமைந்துள்ளது (கி. பி. 1375. நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியுள்ள ஏழு குன்றுகளையுடைய தலம் என்னும் பொருளில் இதனைச் சிங்கவேழ்குன்றம் எனவும் சிலர் வழங்குவர். நவ நரசிம்ம மூர்த்திகளின் பெயர்களும் முறையே வருமாறு:—

1.	லக்ஷ்மி நரசிம்மர்	5.	வராக நரசிம்மர்
2.	யோக நரசிம்மர்	6.	பார்முலிதி நரசிம்மர்
3.	சத்திராந்த நரசிம்மர்	7.	பிரகலாத நரசிம்மர்
4.	உக்கிர நரசிம்மர்	8.	பார்க்கவநரசிம்மர்
		9.	காரங்கி நரசிம்மர்.

"அங்கண் ஞாலம் அஞ்ச அங்குஓர் ஆளரியாய் அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன் இடம்
பைங்கண்ஆனைக் கொம்புகொண்டு பத்திமையால் அடிக்கீழ்ச்
செங்கண் ஆளிஇட்டு இறைஞ்சும் சிங்கவேள் குன்றமே"

செங்கண் ஆளிஇட்டு இறைஞ்சும் சிங்கவேள் குன்றுடைய
எங்கள் ஈசன் எம்பிரானை இருந்தமிழ் நூற்புலவன்
மங்கை யாளன் மன்னுதொல்சீர் வண்டறை தார்க்கலியன்
செங்கை யாளன் செஞ்சொல் மாலை வல்லவர் தீதிலரே.

—பெரிய திருமொழி

(8) திருக்கச்சி நம்பிகளுக்குக் காஞ்சி பூர்ணர் என்பது பெயர். இவர் காஞ்சி தேவப் பெருமாள்பால் நேருக்கு நேர் பேசும் பேறு பெற்று விளங்கியவர். ஸ்ரீ இராமாநுஜர் வேண்டிக் கொண்டபடி, இவர் பெருமாள் பக்கல் விண்ணப்பம் செய்து, பின்வரும் ஆறு திருவார்த்தைகளை அறிந்து இராமாநுஜர்க்கு அறிவித்தருளினர். அவை யாவன:—

1. பரதத்துவம் நாமே
2. சித்து அசித்து ஈசுவர பேதமே தர்சனம்
3. பிரபத்தியே தஞ்சம்
4. அந்திம ஸ்ம்ருதி வேண்டா
5. சரீர அவஸானத்திலே மோக்ஷம்
6. பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது.

(9) முத்திதரும் நகர் ஏரில் முதன்மையதாம் காஞ்சிபுரத்தில் திருத்தண்கா என வழங்கப் பெறும் விளக்கொளிப் பெருமாள் கோயிலின் சூழல், தூப்புல் என்னும் சிறந்த தலம். 'தூப்புல்' என்பது, தூய்மை மிக்க தருப்பைப் புல்லுக்குப் பெயர். அதனை வைதிகர்கள் விசுவாமித்திரம் என்று வழங்குவர். விசுவாமித்திர கோத்திரத்தினைச் சேர்ந்த பெருமக்கள் வாழ்ந்து வந்த இடமாதலின், அத்தலம் தூப்புல் என வழங்கப்பட்டு வருகின்றது என்பர் பெரியோர். இதனைத் 'தூப்பில' என்பதும் பொருந்தும். தூப்பு இல்—தூய்மை வாய்ந்த இடம் என்பது பொருள்.

இத்தலத்தில் திருவவதாரம் செய்தருளிய பெரியார், ஸ்ரீ வேதாந்த தேசிகர் என்பராவர். இவர் தம் தந்தையார் அநந்த ஸோமயாஜி. தாயார் தோதாத்திரி அம்மையார். ஆசிரியர் தாய் மாமனை கிடாம்பி அப்புள்ளார். இவர் திருவவதாரம் செய்தருளிய காலம் கி. பி. 1268. வேதாந்த தேசிகர் அருளிச் செய்த நூல்கள் பல. அவற்றுள் இப்போது தமிழில் வழங்கிவருவன பின்வருவன ஆகும்.

1. அமிர்தரஞ்சனி
2. அதிகார சங்கிரகம்
3. அமிர்தாஸ்வாதினி
4. பரமபத சோபானம்
5. அத்திகிரி மான்மியம்
6. பரமத பங்கம்
7. அடைக்கலப்பத்து
8. அர்த்த பஞ்சகம்
9. ஸ்ரீவைஷ்ணவ தினசரி
10. திருச்சின்னமாலை.
11. பன்னிருநாமம்
12. திருமந்திரச் சுருக்கு
13. துவயச் சுருக்கு
14. சரமச்லோகச் சுருக்கு
15. கீதார்த்த சங்கிரகம்
16. மும்மணிக் கோவை
17. நவமணிமாலை
18. பிரபந்த ஸாரம்
19. ஆகார நியமம்

(10) இராமாநுஜர்க்கே "பஞ்சாசார்ய பதாச்ரிதர்" என்று பெயர் வழங்கும். ஐந்து ஆசிரியர்களை அடிபணிந்து, அரும் பொருள்களைக் கேட்டறிந்தவர் என்பது, இப்பெயரின் பொருள். இராமாநுஜர்க்கு அரும்பொருள்களை விளக்கியருளிய ஐந்து ஆசிரியர்களின் பெயர்களும், அவர்கள் முறையே விளக்கியருளிய பொருள்களின் விவரமும் வருமாறு:—

1. பெரியநம்பி—பஞ்ச ஸம்ஸ்காரம் இட்டருளினர்
2. திருக்கோட்டியூர்நம்பி—இரகசியார்த்தங்கள் கற்பித்தார்
3. திருமாலையாண்டான்—திருவாய்மொழிப் பொருள் விளக்கினர்.
4. திருமலைநம்பி—இராமாயணப் பொருள் உணர்த்தினர்
5. திருவரங்கப் பெருமாள் அரையர்—திவ்யப் பிரபந்தங்கள், தோத்திரங்கள், நல்வார்த்தைகள் அளித்தார்.

சிவஞான போதச் சிறப்பு

முன்னுரை :

'சிவஞான போதம்' நமது அருமைச் செந்தமிழ் மொழியிலுள்ள தலை சிறந்த நூல்கள் பலவற்றில் ஒன்று. இலக்கண நூல்களில் தொல்காப்பியமும், நீதி நூல்களில் திருக்குறளும், காப்பிய நூல்களிற் சிலப்பதிகாரமும், யோக அனுபவ நுட்பங்களை உணர்த்துதலில் திருமந்திரமும், வரலாற்று உண்மைகளை வளம்பெறப் பாடுதலிற் பெரிய புராணமும், கற்பனைத் திறன் செறிந்த கவிதை நலத்திற் கம்ப ராமாயணமும் பிறவும் தந்நிகரற்றுச் சிறந்து திகழ்தல்போல, நம் அருமைச் செந்தமிழ் மொழியின்கண் ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள் நூலாக வீறுற்று விளங்குவது சிவஞான போதம் ஆகும்.

திருக்குறள்போல் நீதி நூல் : சிவஞான
போதம்போல்
பெருக்கமிகும் மெய்ப்பொருள் நூல் ;
பீடுயர்தொல் காப்பியம்போல்
திருத்தமிகும் இலக்கண நூல் : சிறந்ததிரு
வாசகம்போல்
உருக்கமிகும் உணர்வு நூல்; உலகினில்வே
றெங்குமில்லை.

—ஆசிரியர்

திருக்குறள் :

சிவஞான போதம் தமிழ்மொழிக்கண் இயற்றப் பெற்றிருப்பது குறித்துத் தமிழர் அனைவரும் ஒருசேரப் பெருமிதம் கொண்டு மகிழலாம். 'திருக்குறள்' எங்ஙனம் இந்நாளில் உலகப் பெருநூல்களுள் ஒன்றென அனைவராலும் உடன்பட்டுப் பாராட்டப்படுகின்றதோ, அங்ஙனமே உலகப் பெருநூல்களுள் ஒன்றாக வைத்து மதித்துப் போற்றத்தகுந்த கீர்த்தி மிகுந்தது சிவஞான போதம் எனலாம். உண்மையான் உரைக்கப்புகின் திருக்குறளோடு ஒத்த சிறப்புடையது என்று கூறுதலினும், திருக்குறளினும் உயர்ந்த சிறப்புடையது சிவஞானபோதம் எனக் கிளந்து கூறுதலும் பெரிதும் பொருத்தமாகும்.

சுருக்கம் :

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், 'குறள்' என்னும் தன் பெயருக்கேற்ப மிகச் சுருங்கிய நூல் எனப் போற்றப்படுவது அனைவரும் அறிந்ததொன்று. அத் திருக்குறளினும் மிகமிகச் சுருங்கிய தொன்றாகச் சிவஞான போதம் அமைந்திருப்பது 'நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பிறந்தன்றே' எனத்தக்க நிலையில் உள்ளது. 40 வரிகளில் 216 சொற்களில் 624 எழுத்துக்களில் சிவஞானபோதம் அடங்கி விட்டிருக்கின்றது. ஆதலின், உலகிலேயே மிகமிகச் சுருங்கிய நூல்—ஆனால் மிகமிகச் சிறந்து விரிந்த பெருநூல் — சிவஞான போதம் ஒன்றே என நாம் துணிந்து சொல்லலாம்.

பன்னிரு சூத்திரங்கள் :

இருட்கேட்டிற்கும், நிருவிகற்பம் சவிகற்பம் என்னும் இருவகைக் காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பிற்றாய வாறுபோல ; மலத்தீர்வுக்கும் ஆராய்ச்சி அநுபூதி என்னும் இருவகை யுணர்விற்கும், இன்றியமையாச் சிறப்பிற்றாயது சிவஞானபோதம். புற இருள் நீக்கிக் காட்டுதற்குப் பன்னிரு வகைப்பட்ட ஞாயிறுபோல, அக இருள் நீக்கி யுணர்த்துதற்குப் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு சுடர்விட்டொளிர்வது சிவ ஞான போதம். அப் பன்னிரண்டு சூத்திரங்களும், முறையே பின்வரும் பன்னிரண்டு பொருட் பாகுபாடுகளை யுணர்த்துவனவாகும்.

1. பதியுண்மைக்குப் பிரமாணம் 2. பாசமுண்மைக்குப்பிரமாணம் 3. பசுவுண்மைக்குப் பிரமாணம்	பிரமாண இயல்
4. பசு இலக்கணம் 5. பாச இலக்கணம் 6. பதி இலக்கணம்	இலக்கண இயல்
7. அதிகாரியின் இயல்பு 8. ஞானத்தை யுணரும் முறை 9. சாதிக்கும் முறை	சாதன இயல்
10. பாச நீக்கம் 11. சிவப்பேறு 12. அணைந்தோர் தன்மை	பயன் இயல்

அறிவுநூல் முடிவுகளின் செறிவு :

சிவஞானபோதம் 'சைவாகமங்களின் பொருள் நிச்சயம் உணர்த்துவது எனக் காரணக் குறியாயிற்று' என்பர் சிவஞான சுவாமிகள். "நின்ற **சிவம்** ஒன்று; அதனைத் தேர்தல் **ஞானம்**; நிகழ்**போதம்** தேர்ந்ததனைத் தெளிதல் ஆம்" என்பர் கடவுண்மா முனிவர். இச் சிவஞான போதம், செந்தமிழ் நூல்களிலெல்லாம் "சென்னியிற் கொண்டு" போற்றுதற் குரியது. இத்தொடருக்குச் 'சிரத்தான மாகக் கொண்டு' எனச் சிவஞான சுவாமிகள் பொருள் அருளிச் செய்திருத் தலின், தமிழ் நூல்களுளெல்லாம் தலை யாயது இந்நூல் என்பது பெறப்படும். இதனை "உயர் சிவஞான போதம்" எனச் சான்றோர்கள் பாராட்டியுள்ளனர். 'கவிராட்சசர்' (Intellectual giant) எனப்பெறும் சிறப்பெய்திய கச்சியப்ப முனிவர், உலகெங்கணுமுள்ள அறிவு நூல்கள் அனைத்தின் முடிவுகளையும் இந் நூல் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருக் கின்றதென்னும் உண்மையினை,

"சிறிய அடியிற் பெரியமால்
வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிபெலாம்
அகத்தடக் கியதோர்
நெறியின் நீடிய நிகழ்சிவ ஞானபோதத்தைக்
குறிய திந்தமி ழால்உரை குரவனைப்
பணிவாம்"

என்னும் பாடலிற் குறிப்பிட்டிருத்தல் உணரற்பாலது.

நம் கடமை.

இலக்கண அறிவு — இலக்கியப் புலமை — தருக்கநெறிப் பயிற்சி — திரு முறைகளிற செறிந்த உணர்வு—பல்வேறு சமய நூல்களின் ஆராய்ச்சி—இறையருள் நலம் முதலியன பலவும் சிவஞான போதச் செம்பொருட்டெளிவுக்கு இன்றி யமையாதனவாக உள்ளன. 'பேணுபல் கலைகள் என்னும் பெருகு சோபானம் ஏறிய' பின்னரே சிவஞானபோதச் செம் பொருட் சிகரக்காட்சி நம்மனோர்க்குக் கைகூடுவதாக உள்ளது.

அதுபற்றியே, சிறந்த இச் சிவஞான போதம் குறித்தோ, அதனை இயற்றியரு ளிய ஆசிரியர் மெய்கண்டார் பெருமானைக் குறித்தோ, பெரும்பாலான பொது மக்கள் அறிந்து கொள்ளாத அவலநிலை காணப்படுகின்றது. இங்ஙனம் அருமை யுடைமையும் கூட, ஒரு வகையிற் சிவ ஞான போத நூலின் பெருமையை யுணர்த்துவதேயாகும் எனலாம். எனி னும், திருக்குறளைப் படியாதாரும்கூட, அதன் பெயர் கேட்ட துணையானே 'மிகச் சிறந்ததொரு பெரு நூல்' என மதித்துப் போற்றும் அளவுக்கு அதனைக் குறித்துத் தெரிந்திருத்தல்போல, நம் அருமைச் சிவஞான போதம் பற்றியும் உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள் ளச்செய்ய வேண்டுவது நம்மனோர் கடமை!

எல்லா நூல்கள் தம்முள்ளும் இனிதே
சுருங்கித் திகழ்வதெனச்
சொல்லா நிற்பர் திருக்குறளைச் சூழ்ந்து
கருதின் அதனினுமே
பல்லாற் றானும் சிவஞான போதம்
சுருங்கிப் பயன்பெருகும்!
நல்லோர் புகழும் மெய்ந்நூலின்
நலங்கள் பெரிதும் வரம்பிலவாம்! (1)

நாற்ப தடியால், இருநூற்றுப் பதினை
றெளிய நற்சொல்லால்,

ஏற்ற அறுநாற் றிருபான்நான்(கு)
எழுத்தால், சமயக் கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞான போதச்
செழுநூல் போல்எங்கும்
வேற்றோர் நூலின் றெனவுரைப்பின்,
மிக்க அதன்சிர் விளம்புவர்யார்? (2)

இறையே உயிரே உலகென்றே இலங்கும்
மூன்று பெரும்பொருளும்
முறையே தருக்க நெறிநின்று, முன்னும்
பின்னும் முரணுமே
நெறியே ஆய்ந்து, தடைவிடையால்
நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்
கறையின்றுணர்த்தும் சிவஞான போதம்
கடல்போற் பெருஞ்சீர்த்தாம்! (3)

ஒன்றாய் வேறாய் உடனாக உயிர்கள்
தம்மோ டொருங்கியைந்து,
நன்றே அருளால் அவற்றினுக்கு நயந்து
கண்டும் காட்டியுமே
நின்றே உதவும் இறைவனருள் நிலையை,
அத்து விதப்பொருளால்
வென்றே விளக்கும் சிவஞான போதம்
அறிவுக் குயர்விருந்தாம்! (4)

அறிவின் முடிந்த முடிபாக அருமை
பெருமை பல நிறைந்து
செறியும் சைவ சித்தாந்தம் என்னும்
சிறந்த கொள்கையினை,
அறிய அளவும் அறிவியலும் நல்லோர்
அடைவும் நடைமுறையும்
நெறியின் அமையச் சிவஞான போதம் (5)
விளக்கும் நிலையப்பாம்!

— ஆசிரியர்.

நூலின் நுட்பம்:

சிவஞானபோதம் "நூலாருள் நூல் வல்லார்" நுணுகி ஆராய்ந்து கற்றுணர் தற்குரிய நூல். பல நூல்களையும் பயின்றுணர்ந்து கைவந்த பெரும்புலமை மிக்க பெருமக்களே, அதனை கற்றுணர்தல் இயலும். ஒவ்வொரு கலைத்துறையிலும் ஒரு சிலரே தனிப்பயிற்சியும் உணர்வும் பெற்றவர்களாக (specialists விளங்குதலைக் காண்கின்றோம். தனித்தனிப் பண்பும் முயற்சியும் பயிற்சியும் கொண்டு அடைய வேண்டிய அக்கலைத்துறைகளில், பொது மக்கள் சுவையோ உணர்வோ அடைவதென்பது இயலுவதன்று. பொது மக்களுக்குச் சுவை பயவாமையாலோ, அவற்றை அவர்கள் நன்கு அறியமாட்டாமையாலோ, அக்கலைகளுக்கு எத்தகைய இழிவும் சிறுமையும் இல்லை, சிறப்பும் நுட்பமும் வாய்ந்த அரிய பெரிய கலைகள், பெரும்பாலான பொது மக்களுக்குச் சுவை குன்றித் தெளிவின்றிக் கடினமாகவே இருக்கும் ('Caviare to the general'). அவற்றை எத்துணை தான் எளிமைப் படுத்தி விளக்கினாலும், அவற்றின்கண் உண்மை ஈடுபாடும் உழைப்பும் இல்லாதவர்க்குச் சிறிதும் தெளிவு பிறவாது. எளிமைப் படுத்திஞல் நுண் பொருள்கள் விடுபட்டுப் போகும்; நுண் பொருள்களை விளக்க முயன்றால் எளிமைத்தன்மை இன்றிச் சிக்கல் மிகுந்துவிடும். "விரிப்பிற் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்" எனப் புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடிய நிலைமை போன்றது இது (1).

---

(1) "Any one who has ever tried to present a rather abstract scientific subject in a popular manner knows the great difficulties of such an attempt. Either he succeeds in being intelligible by concealing the core of the problem and by offering the reader only superficial aspects or vague allusions, thus deceiving the reader by arousing in him the deceptive illusion of comprehension; or else he gives an expert account of the problem, but in such a fashion that the untrained reader is unable to follow the exposition and becomes discouraged from reading any further"

—Dr. Albert Einstein

பயிலும் முறை :

சிவஞான போதம், கேட்டல்—சிந்தித்தல்—தெளிதல்—ஒன்றிஒழுகுதல் என்னும் நான்குவகை நெறிகளால் உணரற்பாலது. வெறும் நூல்களைப் படித்தல் ஒன்று மட்டுமே கொண்டு, தத்துவ நுண் பொருள்களைத் தகவுற அறிந்து கொள்ளுதல் இயலாது. கடல் நீரைப் பருகினால் விடாய் தணியாமல் மேலும் மிகுதிப்படுதலே போன்று, வெறும் நூல் முகமாகப் படிப்பதனால், நமக்குத் தெளிவு பிறப்பதற்கு மாறாக ஐயங்கள் தான் மிகுதிப்படும்.

> "சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
> மாத்திரத்தே வாய்க்கும்நலம் வந்துறுமோ?— ஆர்த்தகடல்
> தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ?
> தெண்ணீர்மை யாய்! இதனைச் செப்பு"

என்று திருக்களிற்றுப்படியார் கூறுதலும் இங்குச் சிந்திக்கத் தக்கது. "ஒண் குருவால் இன்று இந்நூல் மும்மை மலர்க்கு" என்னும் திருமொழியால், சிவஞான போதத்தினைக் குருமுகமாகவே பயிலுதல் வேண்டும் என்று பெரியோர்கள் வலியுறுத்தியுள்ளமையும் காணலாம். நூலறிவு மட்டுமேயன்றிச் சிவானுபவமும் உடைய சிறந்த சான்றோரையே, இங்கு **'ஒண்குரு'** என்று பெரியோர்கள் குறித்துள்ளனர். இதனாலெல்லாம் சிவஞான போதத்தினைப் பயிலும் நெறியும், பயிற்றும் நெறியும் இனைய என்று ஒருவாறு உணர்தல் கூடும்.

எளியவுரை :

எனினும், சிவஞான போதம் கற்க விரும்பும் ஆர்வலர்களுக்கு ஓரளவேனும் பயன்படும் நிலையில், பின்வரும் எளிய தெளிவுரை ஒன்று இங்குத் தரப்பெறுகின்றது.

—ஆசிரியர்.

கோயில் நிகழ்ச்சிகள்

பிரம்மோத்ஸவ விழா :

23.	ஸ்ரீ பட்டாபிராமஸ்வாமி கோயில், திருப்புல்லாணி	...	26-4 66 முதல் 6-5-66 வரை
24.	ஸ்ரீ அரங்கநாதீஸ்வரர் கோயில், மடவளாகம்	...	24-4-66 முதல் 7-5-66 வரை

கும்பாபிஷேகம் :

ஸ்ரீ திருநாவுக்கரசு ஸ்வாமிகள் மடாலயம், ஆரணி குயப்பாளையம்	...	15-4-66
ஸ்ரீ பைரவநாதஸ்வாமி தேவஸ்தானம், தகட்டூர்	...	27-4-66
ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரர் ஆலயம், பழையனூர், திருவாலங்காடு	...	2-5-66

கம்பர் விழா :

ஸ்ரீ ஆமருவியப்பன் தேவஸ்தானம், தேரழுந்தூர், தஞ்சை ஜில்லா	...	5, 6-4-66

சிவஞான போதத் தெளிவுரை

(மங்கல வாழ்த்து)

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

(பொருள்)

கல் ஆல் நிழல் - கல்லால மரத்தின் நிழலினிடத்தே எழுந்தருளியிருந்து
*மலைவு - நாலுணர்வினுல் எழும் ஐயத்தினை
*இல்லார் - இல்லையாகச் செய்த சிவபெருமான்
*அருளிய - நமக்குக் கொடுத்தருளிய
பொல்லார் - பொல்லாப் பிள்ளையாருடைய
இணைமலர் - இரண்டு திருவடிகளாகிய தாமரைகளை
நல்லார் - மெய்யன்பர்கள்
புனைவர் - தங்கள் தலைமீது தரித்துக்கொள்வார்கள்.

*மலை வில்லார் – மேரு மலையை வில்லாகவுடைய இறைவன்
அருளிய - அருளுதற் பொருட்டு என்றும் பொருள் கொள்ளலாம்.

(கருத்து) சிவ ஞானிகள் விநாயகப் பெருமானை வழிபடுவர் என்றமையின், ஏனையோர் தாமும் வழிபடல் வேண்டும் என விதித்ததாயிற்று.

(விளக்கம்) சிவஞான போதம் பல வகைகளில் தனிச் சிறப்பியல்புடைய நூல். சிறப்பாகக் குறிக்கலுறின், தமிழ் நூல்களுள் முதன் முதல் மங்கல வாழ்த்துக் கூறுவதாக அமைந்தது சிவஞான போதமேயாகும். நூலினுட் கூறப்பெறும் பொருட் பாகுபாடுகளைக் குறிப்பால் தன்னகத்தே அடக்கி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணம் என்பர். இனையதொரு மங்கள வாழ்த்துப் பாடல், சிவஞான போதத்திற் காணப்படுதல்போல, முன்னைய தமிழ் நூல்களில் எதன்கண்ணும் காணப்படவில்லை.

இதன்கண் சிவஞானபோத நாலின்கண் விளக்கப்பெறும் பொருட் பாகுபாடுகள் அனைத்தும் குறிப்பாற் புலப்படுத்தப் பெற்றிருத்தல் காணலாம். (1) சிவஞான போதம் சுருங்கிய நூலாதல் புலப்பட இச்செய்யுள் மிகக் குறுகிய '**வஞ்சித்துறை**'யின் இயன்றுளது. (2) இந்நூல் 12 சூத்திரங்களால் இயன்றுண்மை தோன்ற, இப்பாடல் 12 சொற்களால் அமைவதாயிற்று. (3) இச்செய்யுளகத்துள்ள 'அருளிய' 'புனைவர்' என்னும் இரண்டு வினைச் சொற்களால், இந்நூல் 'பொது' என்றும் 'உண்மை' என்றும் இரண்டு அதிகாரங்களை யுடையதாதல் சுட்டப்பட்டது. (4) மும்மூன்று சொற்கள் ஒவ்வோர் அடியாக வைத்து நான்

கடிகளான் இச்செய்யுள் யாக்கப்பட்டிருத்தலின், இந்நூலும் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோரியலாக நான்கு இயல்களாக வகுக்கப்பெற்றமை தெளியலாம். (5) இச் செய்யுளில் 'மலேவில்லார்' என்னும் தொடர் 'மலே + வில்லார்' எனக் கொள்ளப் படுவதேயன்றி 'மலேவு + இல்லார்' எனவும் பிரித்துணர நிற்கும் திறனுல், இந்நூலின் மூன்றும் சூத்திரமும் நான்காம் சூத்திரமும் தம்முள் தொடர்புடையனவாய் 'இதுவும் அது' என மாட்டெறிய நிற்கும் தன்மை புலனும். (6) அன்றியும், இச் செய்யுளிற் 'கல்லால் நிழல்மலே' என இடமும், 'அருளிய' எனச் செய்கையும், 'இணேமலர்' எனத் திருவடியும், 'புனேவர்' எனப் பேறும் உணர்த்தப் பெற்றிருத் தலால், இந் நூலின் நான்கு இயல்களும் முறையே பிரமாணம் இலக்கணம் சாதனம் பயன் என்பனவற்றை உணர்த்துதல் கொள்ளப்படும்.

ஆசிரியர் பாண்டிப் பெருமாள் என்பவர் இயற்றிய விருத்தியுரையிற் காணப் பெறமல், ஆசிரியர் **சிவஞான சுவாமிகள்** அவர்களால் மட்டுமே திறந்தெரிந்து விளக்கப்பெற்றுள்ள இன்னேரன்ன சிறந்த நுண்பொருட் குறிப்புக்களுக்கு இடனுக யாக்கப்பெற்ற இம் மங்கல வாழ்த்துப்பாடல் ஒன்றே, சிவஞான போதத்தின் அருமை பெருமைகளே விளக்கப் போதியதாகும்.

(அவையடக்கம்)

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார்; — தம்மை
யுணரார், உணரார் உடங்கியைந்து, தம்மிற்
புணராமை, கேளாம் புறன்.

(பொருள்)

தம்மை - தம்மியல்பினே
உணர்ந்து – அறிந்து
தமையுடைய - தம்மையுடையவனுகிய
தன் – ஆண்டவனின் இயல்பை
உணர்வார் - உணர்கின்ற சித்தாந்த சைவர்
எம்மை - எம்மைப் போன்றவர்களே
உடைமை - அடிமையாக உடையவராதலால்
எமையிகழார் - எம்மைப் பாராட்டுவதன்றி இகழ மாட்டார்கள்.
தம்மையுணரார் – தாம் ஒரு பொருள் உண்டென்றும், தம் இயல்பு இன்னது என்றும் அறியாத பிற சமயத்தவர்கள்,
உணரார் - தம்மையும், தலேவன் இயல்பையும் அறியார்.
உடங்கு இயைந்து - (அவர்கள்) ஒருங்கே கூடிக்கொண்டு
தம்மிற் புணராமை - தங்களுக்குள்ளே சேராமல் முரண்படுதலால்
புறன் கேளாம் - (அவர்களின்) புறங்கூற்றுமொழியை யாம் ஒரு பொருளாகக் கொள்ளோம்.

இதுபோன்ற "அவையடக்கச் செய்யுள்" ஒன்றனே வேறு பிற எந்தத் தமிழ் நூலிலும் காண்டல் அரிது. இங்ஙனம் தனிப் புதியதொரு முறையில் 'அவை

அடக்கம்' கூறிய சிறப்பு, ஆசிரியர் **மெய் கண்டார்க்கே** யுரியதாகும். இச் செய்யுளில் தம்மினும் மேம்பட்ட தக்காரைப் போற்றும் பணிவும், தகவிலார் தம்மை யெல்லாம் புறக்கணிக்கும் பெருமிதமும் ஒருங்கே இயைந்து விளங்குகின்றன. ஈண்டுப் புறன் என்றது புறங்கூற்று மொழியையும், புறச் சமயம் பற்றி இகழ்ந் துரைக்கும் மொழியையும் இரட்டுற மொழிதலாற் குறித்து நின்றது. ஆசிரியர் மெய்கண்டார் இங்ஙனம் அவையடக்கம் கூறிய சிறப்பை யுணர்ந்த, அவரைப் பின்னுள்ளோர் "**தவர் அடி புனைந்த தலைமையோன்**' எனப் புகழ்ந்து போற்றி மகிழ்வராயினர்போலும். இத்தொடர்க்குத் 'தவத்தோருடைய அடியைப் புனைந்த அன்பிற் பெரியோன்' எனறும், 'தவத்தோராலே தன்னுடைய அடியைப் புனையப்பட்ட அறிவிற் பெரியோன்' என்றும் பொருள் கொண்டனர் இலக்கணக் கொத்துரை இயற்றிய சுவாமிநாத தேசிகர்.

(பொதுவியல்பு : பிரமாணவியல் : பதியுண்மை)

அவன் அவள் அதுவெனும் அவை, மூவினைமையில்,
தோற்றிய திதியே; ஒடுங்கிமலத் துளதாம்;
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

(பொருள்)

அவன் அவள் அது எனும் - அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் சுட்டிக் கூறப்படுகின்ற

அவை - தொகுதியாகிய உலகம்,

மூவினைமையில் - தோன்றுதல், இருத்தல், மறைதல் என்னும் மூன்று தொழில் களை யுடைமையினால்,

தோற்றிய - ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டதாய

திதியே - உள் பொருளே யாகும்.

மலத்து - (அவ்வுலகம்) ஆணவ மலத்தினால்

ஒடுங்கி - (தான்) ஒடுங்குதற்கு இடமாகிய கடவுள் இடத்தினின்று,

உளது ஆம் - (மீண்டும்) தோன்றுவது ஆகும். (இங்ஙனமாகலின்)

அந்தம் - அந்தத்தைச் செய்யும் கடவுளே,

ஆதி – முதற் கடவுள்

என்மனார் புலவர் - என்று கூறுவர் அறிவுடையோர்.

திதி - உள்பொருள்

ஒடுங்கி - ஒடுங்குவதற்கு இடமாக உள்ள கடவுள்; பெயர்ச்சொல்

அந்தம் - சங்காரம், அழித்தற்றொழில்; சங்கார காரணன். அந்தத்தைச் செய்யும் கடவுளை 'அந்தம்' என்றது 'உபசாரம்' அல்லது 'ஏற்றுரை' என்னும் முறையாகும்.

(கருத்து)

உலகம் முத்தொழில் உடையது; ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள் பொருள்; உலகம் ஆணவமலம் பரிபாகம் ஆதற் பொருட்டு மாயையினின்று தோன்றி, கன்ம மலம் பரிபாகம் ஆதற்பொருட்டு மாயைக்கு நிலைக்களன் ஆகிய

இறைவன்பால் ஒடுங்கி நிற்கும். உலகை ஒடுங்கச் செய்யும் 'சர்வ சங்கார காரணன்' எவனே, அவனே உலகிற்கு முதற் கடவுள் ; ஏனையோர் முதல்வர் அல்லர். (1)

(பாச உண்மை)

அவையே தானே யாய், இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்,
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

(பொருள்)

அவையேயாய் - (முதல்வன்) உயிர்களோடு உயிராய்க் கலப்பினால் ஒன்றாகியும்,
தானேயாய் – (பொருட்டன்மையால்) உயிர்களினின்று தான் வேறாகியும்
அவையே தானேயாய் – உயிர்க்கு உயிராதற்றன்மையால்) அவ் உயிர்களே தானேயாக உடனாகியும்,
ஆணையின் - தனது சிற்சத்தியால் (வரும்),
இருவினையின் - நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளால்,
போக்கு வரவு புரிய - (உயிர்கள்) இறத்தல் பிறத்தல்களைப் புரியும்படி
நீக்கம் இன்றி - (ஆணையாகிய சிற்சத்தியினின்று) பிரிப்பு இல்லாமல்
அன்றே - தொன்று தொட்டே
நிற்கும் - (சமவேதம் ஆக) நிற்பன்.

'அவையே தானேயாய்' என்பது இரட்டுற மொழிதல். ஆதலின் 'அவையே யாய்' 'தானேயாய்'; 'அவையே தானேயாய்' எனத் தனித்தனியே பிரித்தும் கூட்டியும் பொருள் கொள்ளப்படும்.

சமவேதம் - பிரிப்பின்றி இணைந்து நிற்கும் தன்மை

'ஆணையின்' என்பது 'இருவினையின்' என்பதனோடும், **'நீக்கமின்றி'** என்பதனோடும் இயைந்து, சிங்க நோக்காக நின்றது.

(கருத்து) முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் உயிர்களோடு ஒன்றாகியும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல வேறாகியும், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்ம போதம் போல உடனாகியும் நிற்பான் என்பது கருத்து.

சங்கற்பத்தால் சிருட்டிக்கின்ற இறைவன் உலகிற்கு நிமித்தகாரணன் ஆதலால், அவனுக்குத் துணைக்காரணம் **சிற்சத்தி**யென்றும், இருவினைகள் அச் சிற்சத்தியின் வழித்தாய துணைக்காரணம் ஆம் என்றும் கூறினார். முன் சூத்திரத்தில் "மலத்துளதாம்" என **ஆணவமலம்** உண்மை உணர்த்தினார்; இங்கு "இருவினையின்" என்பதால் **கன்ம மலம்** உண்மை கூறினார். இருவினைக்குப் பற்றுக்கோடு மாயையே ஆதலால், **மாயா மலம்** உண்மையும் ஈண்டுக் கூறியதாயிற்று. குடத்துக்கு மண்போல, மாயை உலகிற்கு முதற் காரணம் ஆகும். இவ்வாற்றால் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் ஆகிய பாசத்தின் உண்மை, இந்நூற்பாவால் உணர்த்தப்பெற்றது. (2)

(பசுவுண்மை)

உளதுஇலது என்றலின், எனதுடல் என்றலின்,
ஐம்புலன் - ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின், உணர்த்த வுணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

(பொருள்)

ஆன்மா - உயிரானது,

"இலது என்றலின் உளது" - சூனிய ஆன்மவாதி ஆன்மா என ஒன்று இல்லை என்பன். இல்லை என்று அறியும் அறிவு ஒன்று உண்டு அல்லவா? அதுவே ஆன்மாவாம். ஆதலின் இல்லை என்பதனாலேயே ஆன்மா உண்டு.

எனது உடல் என்றலின் உளது – உலகத்தார் தம்மின் வேறாகிய பொருள்களை "என்பதி என்மனை" என்று கூறுவதுபோல், என் கை என் கால் என்னுடம்பு என்றும் வேறாகவே கூறுவதால், தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்றுண்டு.

ஐம்புலன் அறிதலின் உளது - ஐம்பொறிகள் ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை அறிவது உண்மையேனும், ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையறிவது கூடுமேயன்றி, ஒரு பொறியே எல்லாவற்றையும் அறிவதில்லை. இவ்வைம்பொறி புலன்களால் வரும் ஐந்து பயன்களையும் அறிகின்ற ஆன்மா, அவற்றைத் தனித்தனி அறியும் ஐம்பொறிகளுக்கு வேறாக உள்ளது.

ஒடுக்கம் அறிதலின் உளது - ஐம்பொறிகளும் ஒடுங்கி நின்ற கனவு நிலையில் நிகழ்ந்த காரியங்களை அறிகின்ற தொன்றுளதாதலின், கனவில் இயங்கும் சூக்கும தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்றுண்டு.

கண்படில் உண்டிவினையின்மையின் உளது - (உறக்கம் விழிப்பு என்னும் இரு நிலையிலும் பிராணவாயு ஒரு தன்மையாக இயங்கிக்கொண்டு இருப்பினும்) உறக்கத்தின்கண் இன்பதுன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் உடப்புக்கு இல்லாமையினால், (விழிப்பு நிலையில் உண்டியும் வினையும் உண்மைக்கும், உறக்க நிலையில் அவை இன்மைக்கும் காரணமாகப் பிராணவாயுவின் வேறாக) ஆன்மா என்பது ஒன்று உண்டு.

உணர்த்த உணர்தலின் உளது - கருவிகளோடு கூடிய விடத்தும் தன் தன்மை இது என்று உணராது உணர்த்த உணருகின்ற சிற்றறிவுடைய ஆன்மாவைப்போல் மறந்து மறந்து அறிதலில்லாமல், பிரமம் எனப்படும் முதல்வன் அறிந்தவாறே அறிந்து நிற்கும் பேரறிவுடையவனாதலால் பிரமம் ஆன்மா ஆகாது. ஆன்மா பிரமமாகிய முதல்வனுக்கு வேறானதே ஆகும். பிரமத்தின் வேறாக ஆன்மா உண்டு.

மாயா இயந்திர தனுவினுள் உளது - மாயையின் காரியங்களால் கட்டப்பட்டு அசைகின்ற சூத்திரப் பாவை போலும் உடம்பினிடத்தே அதனின்று வேறாகத் தனியே ஆன்மா என்பதொரு பொருள் உண்டு.

உடம்பில் உள்ள கருவிகளின் சேர்க்கையே ஆன்மா என்னும் கொள்கை தவறானதாகும். ஏனெனில், அக்கருவிகள் ஒன்றன் காரியங்களாய்த் தோற்றக் கேடுகளையுடைய அழியும் பொருள்களாகும்; ஆன்மாவோ என்றும் அழிவில்லாதது).

இச்சூத்திரத்தின் இறுதியில் உள்ள 'ஆன்மா' என்பதும் முதலில் உள்ள 'உளது' என்பதும் சேர்ந்து 'ஆன்மா உளது' எனப் பொருள் கொள்ளக் கிடப்பதால், இது 'பூட்டுவிற் பொருள்கோள்' எனப்படும்.

ஒடுக்கம் - ஐம்பொறிகள் ஒடுங்கி நிற்கும் கனவு நிலை
கண்படுதல் - உறங்குதல்
உண்டி – இன்ப துன்ப நுகர்ச்சி
வினை - உடம்பின் தொழிற்பாடு

இதன்கண் சூனியான்மவாதி தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்கும தேகான்மவாதி, பிராணான்மவாதி, பிரமான்மவாதி, சமூகான்மவாதி. என்னும் எழுவரையும் மறுத்து, உடலின் வேறாக உடலுக்குள் உயிர் என்பதொரு பொருள் உண்டு எனப் பசு உண்மைக்குப் பிரமாணம் காட்டப்பெற்றது. 3

—(தொடரும்)
—ஆசிரியர்.

கோயில் நிகழ்ச்சிகள்

பிரம்மோத்ஸவ விழா:

11.	ஸ்ரீகள்ளப்பிரான் சுவாமி தேவஸ்தானம், ஸ்ரீவைகுண்டம்.	...	12-4-66 முதல் 21-4-66 வரை
12.	ஸ்ரீரெங்கநாதஸ்வாமி தேவஸ்தானம், திருமக்கோட்டை.	...	12-4-66 முதல் 22-4-66 வரை
13.	ஸ்ரீஆதிகேசவப்பெருமாள் தேவஸ்தானம், காட்டுப்பரூர், மங்கலம்பேட்டை அஞ்சல். தென்னாற்காடு மாவட்டம்.	...	28-5-66 முதல் 6-6-66 வரை
14.	ஸ்ரீகாசிபநாதர் மரகதாம்பாள் கோயில், அம்பாசமுத்திரம்.	...	5-4-66 முதல் 14-4-66 வரை
15.	ஸ்ரீதிருக்குற்றாலநாதசுவாமி கோயில், திருக்குற்றாலம்.	...	4-4-66 முதல் 14-4-66 வரை
16.	ஸ்ரீசீதாராம சமேத ஸ்ரீகாடுஅனுமந்தராய ஸ்வாமி தேவஸ்தானம், தாராபுரம்.	...	26-4-66 முதல் 4-5-66 வரை
17.	ஸ்ரீஇரத்தினகிரீஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருமருகல்.	...	23-4-66 முதல் 6-5-66 வரை
18.	ஸ்ரீவியாக்ரபாதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், சித்தலிங்கமடம், திருக்கோவலூர் வட்டம்.	...	23-4-66 முதல் 4-5-66 வரை
19.	ஸ்ரீகௌமாரியம்மன் தேவஸ்தானம், திருக்கண்ணீஸ்வரம்.	...	19-4-66 முதல் 18-5-66 வரை
20.	ஸ்ரீ ஆட்சீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம், அச்சிறுபாக்கம்	...	23-4-66 முதல் 4-5-66 வரை
21.	ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், பரமக்குடி	...	21-4-66 முதல் 3-5-65 வரை
22.	ஸ்ரீ பிரளயகாலேஸ்வரர் கோயில், திருப்பெண்ணாகடம்	...	23-4-66 முதல் 5-5-66 வரை



திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு

இயமகம் :

திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருமுறைகளில், தமிழிலக்கியங்களில் வேறு பிறிதெங்கும் காணப்பெறாத பலபல புதுவகைப் பாடல் அமைப்புகளை முதன் முதலாகக் காணலாம். சங்க கால இலக்கியங்களுள் பெரும்பாலும் அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா முதலிய பாடல் வகைகளையே நாம் பெரும்பாலும் காண்டல் இயலும். ஆனால் திருஞான சம்பந்தர் அருளிய திருமுறைகளிலோ, மொழிமாற்று மாலைமாற்று சக்கரமாற்று ஏகபாதம் எழுகூற்றிருக்கை கோமூத்திரி கூடசதுக்கம் முதலிய புதியபுதிய பாடல் அமைப்புக்களை நாம் காண்கின்றோம். அவைகளுள் திருஇயமகம் என்னும் வகையும் ஒன்று.

மடக்கு :

'இயமகம்' என்பது ஒரு செய்யுளின் கண் ஒருமுறை வந்த சொல்லையோ சீரையோ அடியையோ, பின்னரும் பலமுறை திரும்பத் திரும்பப் பயின்று வருமாறு திறம்பட அமைப்பதாகும். இங்ஙனம் வந்த ஒரு சொல்லையோ சீரையோ, மடக்கி மடக்கிப் பின்னரும் பயின்று வரும்படி செய்யப் பெறுதலால், அத்தகைய செய்யுட்களைத் தமிழில் மடக்கு எனவும் வழங்குவர்.

கலைத்திறன் :

இத்தகைய இயமகம் அல்லது மடக்கு என்னும் செய்யுள் வகைகளை இயற்றும் ஆற்றல், கற்பனை நலன் செறிந்து அற்புதத் திறன் மிக்க அரும் பெருங் கவிஞர்களுக்கே அமைவதாகும். ஓவியக் கலைஞனுக்கு வண்ணமும் தூரிகையும் போலவும், சிற்பக் கலைஞனுக்கு உளியும் கல்லும் போலவும், கலைஞர்களுக்குச் சொல்லும் பொருளும் கருவிகளாக விளங்குகின்றன. கருவிகளைத் தன் திறனுக்கு ஏற்பப் பலவேறு வகைகளிற் பயன்படுத்திக் கலைஞன் தன் கலைப் பொருள்களைக் கவின்மிகப் படைத்து உதவுகின்றான். அதுபோலவே ஒரு சிறந்த பெருங்கவிஞனும், தனக்குரிய சொல்லையும் பொருளையும், தன் கற்பனைத் திறனால் வெவ்வேறு பொருள்படுமாறு திறம்பட வழங்கித் தன் கவிதையினை இயற்றியளிக்கின்றான்.

'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர்' :

ஒவ்வொரு சொல்லும், முதன் முதலாகக் கண்டு பிடிக்கப் பெறும் நிலையில், ஒரு சிறந்த அறிவொளித் துணுக்காக அமைகின்றது (1). அந்நிலையில், ஒரு சொல்லையே வேறு வேறு பொருள்படும் வண்ணம் அழகுறக் கையாளுதல், அதனிலும்

---

(1) "Each word was, at first, a stroke of genius".

—Ralph Waldo Emerson.

சிறந்துயர்ந்த அரிய பெரிய கலைத்திறன் கனிந்த செயலாகும். அவ்வாறு கையாளும் அரும்பெரும் ஆற்றல், ஒப்புயர்வற்ற வித்தகப் பெருங் கவிஞர்களுக்கே இயலும் (2). இனைய ஆற்றலில் நனிமிகச் சிறந்து விளங்குபவர் 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர்' பெருமானே யாவர்.

இதனை ஒருவகையில் திரு இயமகப் பதிகங்களும் சிறப்புற விளக்குகின்றன. திருக்கழுமலம், திருவேகம்பம், திருவாலவாய், திருவீழி மிழலை ஆகிய தலங்களுக்குத் திருஞான சம்பந்தர் திரு இயமகப் பதிகங்கள் அருளிச் செய்துள்ளார்.

திருக்கழுமலப் பதிகம்:

அவற்றுள் முதற் கண்ணதாக விளங்குவது திருக்கழுமலம் பற்றிய பின் வரும் திருப்பதிகம் ஆகும். மதுரை சென்று சைவம் வளர்த்து மீண்டதன்பின், திருஞான சம்பந்தர் சீர்காழியை அடைந்து, அங்கே விளங்கும் திருத்தோணியப்பர் திருவடிகளைத் தொழுது, மகிழ்ந்து பாடியருளியது இப்பதிகம். இதன்கண் அவர் சீர்காழிக்குரிய 12 திருப் பெயர்களையும் தமது வழக்கப்படி வரிசை பிறழாமல் முறையே விதந்தெடுத்துக் குறிப்பிட்டருளி யிருத்தல் கண்டு மகிழத் தக்கது.

—ஆசிரியர்.

---

(2) "The greatest authors in their most serious work, made frequent use of puns. The sermons of Bishop Andrewes, and the tragedies of Shakespeare are full of them...".

—*Joseph Addison, Spectator*, 61.

<u>கோயில் நிகழ்ச்சிகள்</u>

பிரம்மோத்ஸவ விழா

6.	ஸ்ரீதிரிபுரசுந்தரியம்மை இடங்கொண்ட ஸ்ரீவேதகிரீஸ்வரர் தேவஸ்தானம், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம். ...	23-4-66 முதல் 4-5-66 வரை
7.	ஸ்ரீநவநீதகிருஷ்ணப் பெருமாள் கோயில், நவக்கிரகபுரம் என்னும் ஒன்பத்துவேலி, பாபநாசம் வட்டம், தஞ்சை மாவட்டம். ...	16-4-66 முதல் 25-4-66 வரை
8.	ஸ்ரீபெரியநாயகி அம்பாள் ஸமேத ஸ்ரீபவ ஔஷதீஸ்வர ஸ்வாமி கோயில், திருத்துருப்பூண்டி ...	14-4-66 முதல் 7-5-66 வரை
9.	ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமி கோயில், ஸ்ரீ பெரும்பூதூர் ...	17-4-66 முதல் 27-4-66 வரை
10.	ஸ்ரீஉத்தராபதீஸ்வர ஸ்வாமி கோயில், திருச்செங்காட்டாங்குடி ...	15-4-66 முதல் 11-5-66 வரை

திருஞான சம்பந்தர் அருளிச்செய்த

திருஇயமகத் திருப்பதிகம் (உரை)

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே,

கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே,

அற்றம் மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே,

பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே. (1)

(பொழிப்புரை) உமையம்மையார் பொருந்திச் சேர்ந்திருப்பது நின் திருமேனியையே; சிவஞானிகள் உணர்ந்து வழிபடுவது நின்னுடைய அருளின் உண்மையினையே; கற்றறிந்த பெரியோர்கள் வெறுப்பது பிறன் காவலுக்குரிய மனைவியை விரும்புதலையே; நின்னுடைய நெருப்பு மயமான நெற்றிக்கண் சினந்து எரிப்பது மன்மதனையே; நினது மறைவிடத்தினை மறைத்துக் கொண்டு நிற்பது முன்னேயுள்ள பாம்பே; தேவர்கள் அனைவரும் இயற்றுவது உன்னுடைய திருத்தொண்டே; மகனாகப் பெற்று வாரி எடுத்து அணைத்தது முருகனையே; இத்தகைய நீ பிரமபுரம் என்னும் சீர்காழியினையே விரும்பி யருளினாய்.

(குறிப்புரை) உமை - உமாதேவியார். மெய் - திருமேனி, உண்மை. கா+மனை - பிறன் காவலுக்குரிய மனைவி. காமன்+ஐ - மன்மதனை. அற்றம் - மறைவிடம். 'அற்றம் மறைத்தலோ புல்லறிவு' என்பது திருக்குறள். பணி - பாம்பு, தொண்டு. கந்தனை – முருகனை. உகந்தனை - விரும்பினாய். முகந்தது - வாரி எடுத்தது.

சதிமிக வந்த சலந்தரனே
தடிசிர நேர்கொள் சலந்தரனே,

அதிரொளி சேர்திகி ரிப்படையால்
அமர்ந்தனர் உம்பர்துதிப் படையால்,

மதிதவழ் வெற்பது கைச்சிலையே
மருவிட மேற்பது கைச்சிலையே,

விதியினி லிட்டவி ரும்பரனே
வேணு புரத்தைவி ரும்பரனே. (2)

(பொழிப்புரை) வஞ்சனை மிகும்படி எதிர்த்து வந்த சலந்தரன் என்னும் அசுரனை, அவனோடு ஒத்த வஞ்சனையுடன், மிக்க ஒளி பொருந்திய சக்கரப் படையினை உண்டாக்கி, அதனால் அவனது தலையை வெட்டி யருளியவனே! அது கண்டு

மகிழ்ந்து தேவர்கள் உன்னைத் துதித்தலை மேற்கொண்டார்கள். சந்திரமண்டலத்தை அளாவிய மேருமலை நின் கையில் ஏந்துதற்கு உரிய வில் ஆகும். கடலில் எழுந்த ஆலகால விடத்தினை உணவாக ஏற்றுக்கொள்வதை நீ வெறுக்கவில்லை. அற நூல்கள் விதித்த நெறி முறைகளின்படி உலக மக்கள் ஒழுகுவதில் விருப்பத்தை யுடைய மேலான தலைவனே! **வேணுபுரம்** என்னும் சீர்காழியை விரும்புகின்ற சிவ பெருமானே!

(குறிப்புரை) சதி – வஞ்சனை; சலந்தரன் – ஓர் அசுரன்; வஞ்சனையைத் தரித்தவன். துதிப்பு + அடையால். திகிரிப் படையால் - சக்கரத்தினால். கைச்சிலை -கையில் உள்ள வில். நீ வெறுக்க வில்லை. கைத்தல் (கைச்சல்) - வெறுத்தல். இட்ட(ம்) - விருப்பம். இரும் - பெரிய. பரன் – மேலானவனே. விரும்பு + அரனே. அரன் - சிவபிரான்.

காதம ரத்திகழ் தோடினனே
கானவ னுய்க்கடி தோடினனே,

பாதம தாற்கூற் றுதைத்தனனே
பார்த்தன் உடலம் புதைத்தனனே,

தாதவிழ் கொன்றை தரித்தனனே
சார்ந்த வினைய தரித்தனனே,

போதம் அமரும் உரைப்பொருளே
புகலி யமர்ந்த பரம்பொருளே (3)

(பொழிப்புரை) திருச் செவிகளில் பொருந்த விளங்குகின்ற அழகிய தோட்டினை அணிந்தவனே! அருச்சுனன் பொருட்டு வேடுவனாகக் கோலம் கொண்டு, பன்றி வடிவில் வந்த **மூகன்** என்னும் அசுரனைக் கொல்லுவதற்கு வேகமாக ஓடியவனே! திருவடியினாற் கூற்றுவனை மார்க்கண்டேயர்க்காக உதைத்தவனே! பாசுபதக்கணை கொடுத்து அருச்சுனனின் உடம்பைக் கவசம் போலப் பாதுகாத்து மூடியவனே! மகரந்தம் சொரிகின்ற கொன்றை மலர் மாலையை அணிந்தவனே! அடியவர்களைச் சார்கின்ற வினைகளை யெல்லாம் அழித்தொழிப்பவனே! ஆசாரியனின் ஞானம் நிறைந்த செவியறிவுறூஉப் பொருளாக விளங்குபவனே! **புகலி** என்னும் சீர்காழியை விரும்பி எழுந்தருளி யுள்ள முழுமுதற் பெருமானே!

(குறிப்புரை) அமர - பொருந்த. தோடினன் - தோடு அணிந்தவன். கடிது + ஓடினன். பார்த்தன் - அருச்சுனன். உடலம் - உடம்பை. புதைத்தனன் – கவசத்தால் மூடினான். அரித்தனன் - அழித்தான். போதம் - ஞானம். உரை - உபதேசம்.

மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே,
மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே,

மெய்த்துடல் பூசுவர் மேன்மதியே
வேதம தோதுவர் மேன்மதியே,

பொய்த்தலை யோடுறு மத்தமதே
புரிசடை வைத்தது மத்தமதே,

வித்தக ராகிய வெங்குருவே
விரும்பி யமர்ந்தனர் வெங்குருவே. (4)

(பொழிப்புரை) கரிய நிறம் பொருந்திய நஞ்சைக் கக்குகின்ற பாம்பே, நீ மகிழ்ச்சியுடன் இடுப்பில் அரைஞாணுகவும் கோவணமாகவும் சேர்த்து அணிந்து கொள்வது. சிறந்த திருநீற்றுப் பொடியையே சந்தனம் போன்று உடம்பு முழுவதும் பூசிக் கொள்வர். அவர் தம் சடையின் மீது அணிந்திருப்பது சந்திரனையே. மேலான அறிவைத் தரும் கருத்துக்களையே வேதம் முதலிய நூல்களால் ஓதியருளியவர். பொய்ம்மை கூறிய பிரமனின் தலையோடு பொருந்தியிருப்பது தம்முடைய திருக் கையே. பின்னப் பெற்ற சடையின்கண் தரித்திருப்பது ஊமத்த மலரே. ஞான வடிவினர் ஆகிய எங்கள் குருவே! நீர் விரும்பி அமர்ந்திருப்பது வெங்குரு என்னும் பெயரையுடைய சீர்காழியே ஆகும்.

(குறிப்புரை) மாசுணம் - பாம்பு. மாசு(ண்)ணம் - பெருமை மிக்க திருநீறு. மெய்த்து - மெய்யின்கண் பூசப்படுவது ஆகிய சந்தனம். மதி - சந்திரன், அறிவு. அத்தம் - கை. மத்தம் - ஊமத்த மலர். எம் குரு - எங்களுடைய குருதேவர். வெங்குரு - சீர்காழி.

உடன்பயில் கின்றனன் மாதவனே
யுறுபொறி காய்ந்திசை மாதவனே,

திடம்பட மாமறை கண்டனனே
திரிகுண மேவிய கண்டனனே,

படங்கொள் அரவரை செய்தனனே
பகடுரி கொண்டரை செய்தனனே,

தொடர்ந்த துயர்க்கொரு நஞ்சிவனே
தோணி புரத்துறை நஞ்சிவனே. (5)

(பொழிப்புரை) தம் திருமேனியின் ஒரு பகுதியில் இருந்து உடன் பழகுகின்ற சிறப்புப் பெற்றவன் திருமால். நம்மோடு பொருந்தியுள்ள ஐம்பொறிகளைக் காய்ந்து விலக்கி, மனம் இசைந்து ஒருமையுற்றுச் செய்யப்படும் பெரிய தவத்தினால் அடையத் தக்கவன் அப்பெருமான். உயிர்கள் எல்லாம் நன்மைகள் பெறுமாறு சிறந்த வேதங்களைத் தோற்றுவித்தருளியவன். சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணமயப்பட்ட கொடியவர்களின் செயல்களை அழித்தான். படத்தினைக் கொண்ட பாம்பினை இடுப்பில் அணிந்தான். கஜாசுரன் என்னும் யானையின் தோலையுரித்துப் போர்வையாகக் கொண்டு, அதனை அழித்தொழித்தான். தன் அடியவர்களைத் தொடர்ந்து நின்ற துன்பங்களை நீக்குதலில், அவற்றிற்கு ஒரு பெருங் கொடிய நஞ்சு ஆக இருப்பவன் இவன். தோணிபுரம் என்னும் சீர்காழியில் உறைகின்ற நம்முடைய சிவன்.

(குறிப்புரை) மாதவன் - திருமால்; பெரிய தவத்தின் பயனாக விளங்குபவன். கண்டனன் - உண்டாக்கியவன், கண்டித்து அழிப்பவன். பகடு - யானை. அரை செய்தனன் - இடுப்பில் அணிந்தான்; அரைத்துத் தேய்த்து அழித்தான். நஞ்சு + இவன். நம் + சிவன்.

திகழ்கைய தும்புகை தங்கழலே
தேவர் தொழுவதுந் தங்கழலே

இகழ்பவர் தாமொரு மானிடமே
யிருந்தனு வோடெழில் மானிடமே,

மிகவரு நீர்கொளு மஞ்சடையே
மின்னிகர் கின்றது மஞ்சடையே,

தகவிர தங்கொள்வர் சுந்தரரே
தக்க தராயுறை சுந்தரரே. (6)

(பொழிப்புரை) திகழ்கின்ற கையில் ஏந்தியிருப்பதும் புகை தங்குகின்ற நெருப்பே; தேவர்கள் வணங்குவதும் திருவடிகளேயே. இகழ்ந்தவர்கள் ஆகிய தாருகவன முனிவர்கள் ஏவிய மான், இடக் கையில் உள்ளது. தகுதியுடைய அடியவர்களை ஆட்கொள்வதற்காக எழுந்தருள்வது சிறந்த மானிடத் திருமேனிகொண்டே. மிகுதியாகப் பெருகி வருகின்ற நீரைத் தம்மிடம் கொண்டுள்ள மேகங்கள் அடைந்து தங்கியிருப்பதும், மின்னலைப் போன்று ஒளிமிக்குத் திகழ்வதும் அழகிய சடையே. தகுதியாகச் செய்யப்பெறும் தவமும் நோன்புகளும் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அருள் புரியும் உலக முதல்வர், சிறந்த **பூந்தராய்** என்னும் சீர்காழியில் உறைகின்ற அழகர் ஆகிய சிவபெருமானே!

(குறிப்புரை) தங்கு+அழல். தம்+கழல். மான்+இடம். மானிடம் - மனித வடிவம். மஞ்சு+அடை. மஞ்சு - மேகம். அம்+சடை. சுந்தரர் - அழகர். (வ) சுந்தரர் - உலக முதல்வர். வசுந்தரை, பசுந்தரை - உலகம். பூந்தராய் - சீர்காழி.

ஓர்வரு கண்கள் இணைக்கயலே,
உமையவள் கண்கள் இணைக்கயலே,

ஏர்மரு வுங்கழல் நாகமதே
யெழில்கொளு தாசன ஞகமதே

நீர்வரு கொந்தள கங்கையதே
நெடுஞ்சடை மேவிய கங்கையதே,

சோர்வரு யோகதி யம்பகனே
சிரபுர மேயதி யம்பகனே. (7)

(பொழிப்புரை) தியானித்தல் இல்லாத புறக்கண்கள் இரண்டிற்கும் அப்பாற்பட்டவர். உமையம்மையின் கண்கள் இரு கயல் மீன்கள் போல்வன. அழகு பொருந்திய கழல் என்னும் கால் அணியாகத் திகழ்வது பாம்பே. எழுச்சி கொண்ட அக்கினியே திருமேனியாக விளங்குவது. நீர்மை பொருந்திய கொத்தான கூந்தலானது ஒழுங்காக உள்ளது. நீண்ட சடையின்மேல் இருப்பது கங்கை யாறே. சேர்தற்கு அரிய யோக நிலையில் மூன்று கண்களை யுடையவன். **சிரபுரம்** என்னும் சீர்காழியில் மேவியுள்ளவன். தீயை அம்பாகக் கையிற் கொண்டிருக்கும் சிவ பெருமான்.

(குறிப்புரை) ஓர்வு அரு - தியானித்தல் இல்லாத. இணைக்கயல் - இரண்டிற்கும் அப்பாற்பட்டவர்; இரண்டு கயல் மீன்கள் போன்றவை. இணைக்கு+அயல். இணை+கயல். நாகம் - பாம்பு. ஆகம் - உடம்பு. உதாசனன் - அக்கினி. நீர்வரு - நீர்மையுடைய, அழகு பொருந்திய. கொந்து+அளகம்+கையது - கொத்தான கூந்தல் ஒழுங்காக உள்ளது. கை - ஒழுங்கு. தியம்பகன் (திரியம்பகன்) - மூன்று கண்களையுடையவன். தியம்பகன் (தீ+அம்பு+அகன்) - தீயை அம்பாகக் கையிற் கொண்டிருப்பவன், சிவபெருமான்.

—(தொடரும்)

இராமலிங்கரும் சன்மார்க்கமும்

முன்னுரை :

ஒரு நாட்டின் பெருமைக்கு, அந்நாட்டில் தோன்றும் சமயச் சான்றோர்கள்—தத்துவஞானிகள்—கவிஞர் பெருமக்கள் ஆகியோரும் காரணமாக விளங்குகின்றனர்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

என்பது திருக்குறள். இதன்கண் 'தக்கார்' என்றது, மேற்குறித்த பெருமக்கள் போன்றவர்களையே எனக்கொள்ளலாம். இராமலிங்க அடிகள் ஒரு சிறந்த சமயச் சான்றோர், தலைசிறந்த தத்துவ ஞானி, ஒப்புயர்வற்ற பெருங்கவிஞர்!

சமயச் சான்றோர்கள் :

சமயச் சான்றோர்கள் அல்லது அருளாளர்களால் நமக்கு விளையும் நன்மை யாது? 'சும்மா இருக்கும் சுகம் விரும்பி ஒரு செயலும் செய்யாமல், தியானத்திலோ மௌனத்திலோ தவத்திலோ ஈடுபட்டு வாளா கிடக்கும் ஞானிகளால், நாட்டுக்கு ஒரு பயனும் இல்லையே! எனச் சிலர் கருதுவர்.

ஞானிகள் ஒரு செயலும் செய்யாமல் இருப்பது போலத்தான் நமக்குத் தோன்றுகின்றது. ஆனால் ஞானிகளின் 'செயல் செய்யாமை', எத்தனையோ பல செயல்களை விளைவிக்கின்றது என்பதனை, நம்மிற் பலர் அறிவதில்லை. சூரியனும் சந்திரனும் இருக்கின்றன. அவைகள் தாமாக அறிந்து ஒரு செயலும் செய்வதில்லை. ஆனால் அவைகள் இருப்பதனாலேயே நமக்கு எத்தனையோ பல நலங்கள் விளைகின்றன. அதனைப் போன்றதே ஞானிகள் அல்லது அருளாளர்களின் நிலையும். (1)

தவ ஆற்றல் :

'கோஹினூர்' போன்ற வைர மணிகள் தம்மைச் சுற்றிலும் ஒரு பெரும் சுடரொளியைப் பரப்பி நிற்பது போல, ஞானிகளும் அருளாளர்களும் தம்முடைய தவஆற்றல் - ஞான ஒளி - சிந்தனைத்திறன் ஆகியவற்றால் உலகில் அருளலைகளைப் பரப்பி, ஆருயிர்களுக்கு நன்மை செய்து வருகின்றனர். அருளாளர்களாகிய ஞானிகளின் முன்னே,

"தீய, வாய விலங்கு வன்தொழில்
செய்ய அஞ்சிடும்; நஞ்சுகால்

வாய நாகம், மணிப் பணங்கொள்
சுடர் விளக்கு எடுக்கும்"

ஞானிகளின் முன்னிலையில் பகைவிலங்குகளும் தம்முடைய பகைமை மறந்து, நட்புரிமை கொண்டு உறவு பாராட்டி மகிழும்.

"செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங்கும் அருவிய மலைகிழ வோனே"

"கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறத்தாழ் புரிசடை புலர்த்து வோனே"

---

(1) "There is a stage in life when a man does not need even to proclaim his thoughts, much less to show them by outward action. Mere thoughts act. They attain that power. Then it can be said of him that his seeming **inaction** constitutes his **action.** I must confess that I am far from that state. All I can say is that my striving is in that direction." —**Mahatma Gandhiji.**

எனச் சங்க இலக்கியங்கள் பாடுதற்கு ஏற்ப, தவநலஞ் சான்ற தக்கோர்களுக்கு விலங்குகளும் வயப்பட்டுப் பணிவிடைகள் புரியும்.

ஞானிகளின் பேருதவி :

இத்தகைய அருளாளர்கள் ஆகிய பெரியோர்களால்தான் உலகம் இயங்கி வருகின்றது. உலக நிகழ்ச்சிகளுக்கும் இயக்கத்திற்கும், உயர்ந்த அருளாளர்களே ஒருவகையிற் காரணர்களாகத் திகழ்கின்றனர்.

> "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே;
> நிகழ்ச்சி அவர்கட் டாக லான"

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

> "பண்புடையார்ப் பட்டுண்டுலகம்; அதுவின்
> மண்புக்கு மாய்வது மன்" [றேல்

என்னும் திருக்குறளும் இக்கருத்தினையே வலியுறுத்துவதாகும் எனலாம். ஞானிகள் நம்முடைய ஆன்மீக நலத்திற்கு ஒளியும் வளமும் இன்பமும் நல்கிப் பேருதவி புரிந்து வருகின்றனர். (2)

இராமலிங்கர் :

அத்தகைய அருள் ஞானிகளுள்—அவதாரச் சித்த புருஷர்களுள் - ஒருவராக விளங்கும் நம் இராமலிங்க அடிகள், நம் ஆன்ம நல வளர்ச்சிக்காகப் பெருந் தூய்மையும் பேரின்பமும் விளைக்க வல்ல பெருஞ்சான்றோர் ஆவர். "ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்னும் பெருவேட்கையும் குறிக்கோளும் கொண்டிருந்த அடிகளார், ஆருயிர்கள் அனைத்திற்கும் அன்பு செய்யும் ஜீவகாருண்யச் செந்நெறியினை உலகிற் பரப்பியருளினர். சாதி சமய நிற மொழி இன வேற்றுமைகளையெல்லாம் மறந்து, மக்கள் எல்லோரும் அன்பினால் ஒற்றுமைப்பட்டு இன்புற்று வாழ வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை யுணர்வு, மக்களிடையே பரவி வளர்ந்து செழிக்குமாறு பாடுபட்டார். இவற்றால் உலகில் துன்மார்க்கங்களையும் புன்மார்க்கங்களையும் போக்கி, உயர்ந்த சன்மார்க்கம் பற்றி இடையறாது மக்களுக்கு அறிவுறுத்தியருளினர்.

சன்மார்க்கம் :

"ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள" எனத் திருமூலர் அருளிச் செய்தவாறு போல, அருள் ஞானப் பெரியோர்கள் அனைவரும் ஒரு செந்நெறியினையே முடிவில் வலியுறுத்திச் செல்லுகின்றனராயினும், அவ்வக்கால நிலைக்கு ஏற்ப அதற்கு அவர்கள் வெவ்வேறு பெயர்களை வழங்குகின்றனர். அம்முறையில் திருவள்ளுவர் பொது நோக்கம் கடைப்பிடித்து, அறத்தைப் போதித்தார். திருஞானசம்பந்தர் தம்முடைய ஞான நன்னெறியைத் 'திருநெறி' என்றும், தம் தேவாரத்தினைத் 'திருநெறிய தமிழ்' என்றும் குறிப்பிட்டார். தாயுமானவர் தம் கொள்கையினைச் சமரசம் என்னும் பெயராற் சுட்டியருளினர். இராமலிங்க அடிகளோ 'சன்மார்க்கம்' என வழங்கினர். எனவே, இராமலிங்கரின் இணையற்ற இனிய செந்நெறிக்குரிய சிறப்புப் பெயர் 'சன்மார்க்கம்' என்பதே என்று கூறலாம்.

எங்ஙனம் காந்தியடிகளால் 'அஹிம்ஸை' 'ஸத்தியாக்கிரகம்' என்ற சொல்லும் சொற்றொடரும் சிறப்பாகப் போற்றிக் கைக் கொள்ளப் பெற்றனவோ, அம்முறையில் இராமலிங்கரால் மிகவும் சிறப்பாகப் போற்றிப் பரப்பப்பெற்ற சிறந்த நன்னெறியே சன்மார்க்கம் எனக் கூறுதல் பொருந்தும்.

சன்மார்க்க சங்கம் :

சன்மார்க்கமானது பொது நோக்கம் (சமரசம்) தழுவியது; வாழ்க்கையில் பல துறைகளிலும் தூய்மை (சுத்தம்) பேணுவது; உண்மை (சத்தியம்) போற்

(2) The French writer Maurice Barres was once asked "What is good of the **saints?"** He replied, **"They delight the soul".**

—*Rone Fulop Miller.*

றுவது; மக்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டுக் கூடி இன்புறுமாறு செய்யும் தன்மையது. ஆதலின், அச் சன்மார்க்கத்தினைப் பரப்பும் குறிக்கோளுடைய அமைப்பிற்கு, இராமலிங்கர் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்னும் பொருள் நிறைந்த சிறந்த பெயரை வழங்கியருளினார்.

சன்மார்க்கர்க்கும் துன்மார்க்கர்க்கும் இடையேயுள்ள வேறுபாட்டினையும், முறையே அவ்விரு வகையினர்க்கும் உரிய இயல்பினையும் இராமலிங்கர் தம்முடைய பாடல் ஒன்றில் விளக்கியருள்கின்றார்!

சேய்போல் உலகத் துயிரைஎல்லாம்
எண்ணிச் சேர்ந்து பெற்ற
தாய்போல் உரைப்பர் சன்மார்க்க
சங்கத்தவர்! சாற்றும் எட்டிக்
காய்போற் பிறர்தமைக் கண்டால்
கசந்து உள் கடுகடுத்தே
நாய்போற் குரைப்பர் துன்மார்க்க
சங்கத்தவர் நானிலத்தே

எனவரும் திருவருட்பாவினால், சன்மார்க்க சங்கத்தவர் சால்பும் சிறப்பும் யாவரும் தெளியலாம்! சன்மார்க்க நெறியிலும், அதனை வளர்க்கும் சன்மார்க்க சங்கத்தின் மாட்டும், இராமலிங்க அடிகளார்க்கு இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை,

தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும், சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்,
துங்கமே பெறும்சற் சங்கம் நீடூழி
துலங்கவும், சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும், இச்சைகாண் எந்தாய்!

எனவரும் திருவருட்பாவினால், நாம் தெளிவுற அறிந்து கொள்ளலாம்.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக!
அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க!—தெருள் நிறைந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக! நன்றுநினைத்(து)
எல்லோரும் வாழ்க; இசைந்து.

என்னும் பாடலால், சன்மார்க்க ஆட்சி விரைவில் மலர்தல் வேண்டும் என அடிகள் பெரிதும் விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். அவர்தம் விருப்பம் நிறைவேறி ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கின்றது.

முடிவுரை.

இங்ஙனமே இராமலிங்கர் கண்ட ஏனைக் கனவுகளும் விரைவில் நனவாகி—நிறைவேறி, சன்மார்க்கச் செந்நெறியானது முழு வெற்றி பெற்று உலகம் எங்கணும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

— ஆசிரியர்

(செய்திச் சுருக்கம்)

திருநாவுக்கரசர் குரு பூசை விழா:

திருவாரூரில் சித்திரைச் சதயத் திருநாளை ஒட்டி, மூன்று நாட்கள் (ஏப்ரல் 14, 15, 16 தேதிகளில்) மிகவும் சிறப்புற நடைபெற்றது. முதல்நாள் விழாவிற்குச் சபாநாயகர் **திரு. செல்லபாண்டியன்,** பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமை தாங்கினார்கள். சதய நாள்விழா அன்று தருமையாதீன மகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி** அவர்கள் எழுந்தருளிச் சிறப்பித்தார்கள். பல பேரறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ஓதுவாமூர்த்திகள் பலர் தேவார பாராயணம் செய்தார்கள். சிவபூசகர்கள் பலர் வந்திருந்து மகிழ்வித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மூன்று நாட்களிலும் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி, விழாவைப் பக்தி சிரத்தையுடன் முறைப்படி நிகழுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து நிறைவேற்றி வைத்தார்கள்.

மதிப்புரைகள்

இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரலாறு :

இந்நூல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் அரும்பெருந் தலைவர் ஆகிய ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம், நமது அறநிலைய ஆட்சித் துறையின் முன்னாள் ஆணையர் உயர் திரு ஏ. உத்தண்டராமர், பீ.ஏ., பீ.எல்., ஐ.ஏ,எஸ்., (ஓய்வு) அவர்களால், ஆங்கிலத்தில் சிறந்த முறையில் அழகுற எழுதப் பெற்றது.

இதனை இந்தியிலும் தமிழிலும் பிறரைக் கொண்டு மொழி பெயர்த்து, எல்லா மக்களுக்கும் இனிது பயன்படும்படி, சென்னை கிடங்குத் தெரு 3/96, ஆம் எண் ஸ்ரீ பால சுப்பிரமணியம் குழுவினரின் சமய தான நிதியும், ஷி தெரு குமார் சகோதரர்கள் நிதியும் கொண்டு, ஸ்ரீ இராமநாத சுவாமி தேவஸ்தானத்தினர் வெளியிட்டுள்ளனர்.

இந்நூலுக்கு நமது அறநிலையத் துறையின் இந்நாள் ஆணையர் உயர்திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பீ.ஏ., பீ.எல். அவர்கள் சிறந்த நல்ல அணிந்துரை ஒன்றினைப் பெரிதும் உவந்து வழங்கியிருக்கின்றார்கள். அதன்கண் இந் நூலின் ஆசிரியர் திரு. அ. உத்தண்டராமர் அவர்களின் பல பெருஞ் சிறப்புக்களையும், இந் நூல் வெளியீட்டுக்கு நிதியுதவி புரிந்துள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணியம் குழுவினர் - ஸ்ரீ குமார் சகோதரர்கள் ஆகியோரின் சிறந்த திருப் பணிகளையும், இந்நூல் வெளியீட்டுக்கு ஊக்கமும் ஆசியும் அளித்தருளிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர் அவர்களின் சால்புகளையும், நமது ஆணையர் அவர்கள் நலமுற வியந்து போற்றிப் பாராட்டியுள்ளார்கள்.

இராமேசுவரத்தின் தலச் சிறப்பு - கோயில் அமைப்பு—வழிபாடு நிகழும் காலங்கள்—அபிஷேகம் அருச்சனை முதலியன பற்றிய செய்திகள்—தீர்த்தங்கள்—சந்நிதிகள் விழாக்கள் விடுதிகள் நிர்வாகம் சேவைகள் தல சம்பந்தமான நூல்கள் என்பவற்றின் விவரங்கள், இந் நூலில் தெளிவுறத் தரப் பெற்றுள்ளன. துதிப் பாடல்களின் தொகுப்பும், இராமேஸ்வரம் தீவு கோவில் ஆகியவற்றின் வரை படங்களும் (Maps) இதன்கண் இணைக்கப்பட்டுள்ளன. கிடைக்குமிடம் : இராமேஸ்வரம் தேவஸ்தானம். விலை : தமிழ்—40 புதுக்காசு : ஆங்கிலம் — இந்தி இரண்டும் சேர்ந்தது—50 புதுக்காசு.

2. திருக்கண்ணபுரக் கலம்பகம் :

சென்னை திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமை யாசிரியர் திரு. டி. எஸ். இராஜகோபாலன், பீ ஏ., எல்.டி. அவர்கள் இயற்றியது. பலவகையான மலர்களைக்கொண்டு நலமிகத் தொடுக்கப்பெறும் நறுமணமாலைபோல, பலவகைப் பாக்களையும்கொண்டு சுவைமிகப் புனையப்படுவது கலம்பகம் என்னும் பிரபந்தம். பாடுவதற்கு அருமை வாய்ந்தது, இப்பனுவல் ! இதனை நல்ல இனிய தமிழில், சிறந்த முறையில், தேன் என இனிக்கப் பாடியுள்ளார் இதன் ஆசிரியர் ! பாடல்களின் பொருளும் சுவையும் தோன்றுமாறு உரையும், சுருக்கமாகவும் விளக்கமாகவும் தரப்பட்டுள்ளது.

கலம்பகத்தின் ஓர் உறுப்பாகிய **மறம்** என்பதனை ஆசிரியர் பாடியுள்ள முறை சுவை பயக்கின்றது, 'சிமுகம் பாறு கொள்ள வல்லது' (25 "புனை சுருட்டோலையை மன்னன் நீளிணைக் காதில் திணித்திடு ; இளம்பிடி வேண்டுதியேற் கான் அடை ; காரிகை வேண்டிற் பாவலர் தம் முழை நாடு ; அணங்கு எனக் கூறிக் கொலைவினை யாளரை மேவு; பாவை வேண்டுதியேல் மரத்திலும் மண்ணிலும் காண் " (26) என வரும் பகுதிகள் இருபொருள் அமைந்து இனிமை பயக்கின்றன. 37ஆம் பாடலின் இகந்தான் இகத்தான், மலையான் மலைத்தான், இடந்தான் இடத்தான் முதலிய சொல்லாட்சிகள் சிறப்பாக உள்ளன. 41ஆம் பாடலில் களி என்னும் உறுப்பிற்கு ஏற்ப மது காடி கோழி ஆடு போதை என்னும் குறிப்புக்கள் அமையும்படி இயற்றியிருப்பது பாராட்டுதற்குரியது, 44-ஆம் செய்யுளில் "வரவு ஒழி என்பாடு இனி, உன் பாடினிபாற் போவாய். அவரது போல் இரு நாவர் செவி நிலை

யும் ஏலார். வரத்தை மறந்தார். பரத்தை மிகப் பேசி இகந் தோய்வர்" என வரும் பகுதி பொருட்சிறப்பு மிக்கு விளங்குகின்றது. 57ஆம் பாடலில் அறுசுவையும், 60ஆம் பாடலில் வாரத்தின் ஏழு நாட்களும் ஆகக் கண்ணபுரத்துப் பெருமானைக் குறிப்பிட்டிருப்பது, கவிச்சுவைக்கு எடுத்துக் காட்டு ஆகும். 78ஆம் பாடல், கண்ணபுரத்துச் சௌரிராஜன் தனக்குரியதாகக் கொண்டுள்ள கேசவன் என்னும் திருநாமத்திற்குரிய மூன்று பொருள்களையும் சிறப்புற விளக்குகின்றது.

இன்னோரன்ன சிறந்த பல பாடல்களைக் கொண்ட இந்நூலை இயற்றியுள்ள ஆசிரியரின் தமிழன்பும் ஆர்வமும் புலமையும் பத்தியுணர்வும் மிகமிகப் போற்றுதற்குரியன. கிடைக்குமிடம்: புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 135, பவழக்காரத் தெரு, சென்னை 1. விலை குறிக்கப்படவில்லை.

3. முப்பால் ஒளி

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரை எம்.ஏ., எல்.டி., அவர்களால், 1966 தை மாத முதல் தொடங்கி வெளியிடப்பெறும் ஒரு திங்கள் இதழ். திருக்குறளையும், அதன் சிறந்த பொதுமைக் கொள்கைகளையும் பரப்பும் குறிக்கோளுடன், இவ்விதழ்தோன்றியுள்ளது. திருக்குறளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கருத்துக்களைப் பலகோணங்களிலும், பல துறைகளிலும், பலப்பல வகைகளிலும் இணைத்துப் பிணைத்து விளக்க வல்லதாக இவ்விதழ் திகழ்கின்றது.

ஆசிரியரின் பல ஆண்டு கால ஆராய்ச்சியையும், பன்மொழிப் புலமையையும், அரிய உழைப்பையும் இம் முதற் கதிரிலேயே நாம் செம்மையுறக் காணுகின்றோம். அறிவுக்கு விருந்தாகத் திகழும் பல புதிய விழுமிய கருத்துக்களை ஆசிரியர் விளக்கிச் செல்கின்றார். அனைவரும் பெற்றுப் படித்துத் தொகுத்து வைத்துப் போற்றிப் பயன் அடைய வேண்டிய அரிய சிறந்த கலைச் செல்வம் நிறைந்த இதழ் இது! 64 பக்கங்கள் கொண்டது. தனிப்பிரதி விலை ரூ. 1-25. ஆண்டு வரி: ரூ. 12-00. ஆயுள் வரி 101-00. கிடைக்குமிடம் 'அலமேலு நிலயம்' சென்னை-18.

4. வேதாரணியத் தல புராண வசனம்

இந் நூல் சிதம்பரம் பரஞ்சோதி ஆசிரமத் தாபகரும் உரிமையாளரும் ஆகிய தவத்திரு சி. ப. விசுவநாதசுவாமி அவர்களால், வடமொழி நூல்களினின்று காசிவாசி சிவானந்த யதீந்திரசுவாமி அவர்களின் துணை கொண்டு மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. வேதாரணியத்திற்கு அருகிலுள்ள அகத்தியான்பள்ளி, கோடிக் குழகர் கோயில் என்னும் தலங்களின் வரலாறுகளும் இந் நூலில் அமைந்திருக்கின்றன. மார்க்கண்டேயர் அருளிய மிருத்யுஞ்சயத் தோத்திரம் (இறப்பை வெல்லும் துதி), ஆதி சங்கரர் அருளிய அன்னபூர்ணா அஷ்டக ஸ்தோத்திரம், வேதாரண்யேஸ்வரர் அஷ்டோத்திர சதநாமாவளி, தீர்த்த யாத்திரைப் பலப்பிராப்தி விளக்கம் என்பனவும், அழகிய படங்கள் பலவும் இந்நூலின் கண் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலைத் தவத்திரு. சுவாமிகள் அவர்கள் பெருமுயற்சி எடுத்து, மிகவும் உழைத்து, பலரின் துணை கொண்டு, நன்கினிது திருத்தமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 150 பக்கங்கள் கொண்ட இச் சிறந்த நூலின் விலை ரூ. 2. கிடைக்குமிடம் தவத்திரு சி. ப. விசுவநாத சுவாமிகள், பொ. கா. சாதுக்கள் மடம் வடக்கு, வீதி, வேதாரனியம்.

5. தியாகராஜ கீர்த்தனைப் பொருள் விளக்கம்

இந் நூல், புகழ்பெற்ற சங்கீத சாகித்ய வித்வான் உயர்திரு கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அவர்கள் தெலுங்கு மொழியிற் கனிதுளும்பப் பாடியருளிய கலைநலம் சிறந்த இசைப்

பாடல்கள் ஆகிய கீர்த்தனைகளைச் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' சுவைமிகப் பாடுதற்கு, நல்லிசை அறிஞர்களுக்குப் பயன்படும் வகையில், ராகம் தாளம் கீர்த்தனை பதவுரை கருத்துரை விளக்கவுரை குறிப்புரை குறிப்புள் குறிப்பு முதலியன பலவும் அமைய, இந்நூல் மிகச் சிறந்த முறையில் இயற்றப்பட்டிருக்கின்றது, ஆசிரியர் இதனைப் பல ஆண்டுகள் முயன்று பெரிதும் உழைத்து, உயர்ந்த குறிக்கோள்களுடன் வெளியிட்டிருக்கிறார். இசைக்கலையிலும் பொது வாழ்விலும் மிகு புகழ் பெற்று விளங்கும் பேரறிஞர்கள் பலர், இந்நூலைப் பாராட்டிப் புகழ்ந்து முன்னுரை அளித்துள்ளனர். 'இசை இலக்கிய இராமாயணம்' என அமைந்துள்ள இந்நூலில், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 50 கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. மற்றும் எஞ்சியுள்ள சுமார் 600 கீர்த்தனைகளும், அவற்றின் பொருள் விளக்கங்களும் தொடர்ந்து முறையே வெளி வர உள்ளன இசைக் கலைஞர்களுக்கும், ஸ்ரீ தியாகப் பிரமத்தின் பக்தர்களுக்கும் இன்றியமையாத சிறந்த முதல் வெளியீடான இது, சுமார் 300 பக்கங்கள் கொண்டுள்ளது. விலை ரூ. 7-50.

—ஆசிரியர்



ஸ்ரீ கள்ளழகர்—குதிரை வாகன சேவை, அழகர் கோயில்.

சிவாலயப் பரிவார மூர்த்திகள்

(திரு சு. சுவாமிநாத சிவாசாரியர், தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.)

(திரு நந்தி தேவர்)

முன்னுரை.

அன்பு செய்தால் ஆண்டவன் அருளைப் பெறலாம். அவன் அருளைப் பெறுதற்கும் அவன் துணையே வேண்டும். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்பது திருவாசகம். இறைவனின் திருநாமங்களைப் பேசுதலும் சிந்தித்தலும் உச்சரித்தலுமே நல்வழியைக் காட்டும். இடைவிடாது எண்ணுகின்ற அந்தச் சிந்தனையே உயர்வை உண்டாக்கும். உறுதியுடன் இடைவிடாத திருநாமத்தின் சிந்தனையே, சாலோகம், சாமீப்யம், சாரூப்யம், சாயுஜ்யம் என்ற பதவிகளைக் கொடுக்கும். அத்தகைய சாரூப்ய பதவியைப் பெற்றவர் திருநந்தி தேவர் ஆவார். இவருக்குத் திருக்கோயிலில் **அதிகாரநந்தி** என்பது வழங்கும் பெயர்.

வடிவம்:

இவர் கோபுரவாயிலின் உட்புற நடையில் உள்ளதான "குடை அறை" என்னுமிடத்தில் தனது சத்தியுடன் காக்ஷியளிப்பதைக் காணலாம்.

மான் மழுவேந்திய இருபுயங்களுடன் கூப்பிய இருகைகளோடு நான்கு திருக்கரங்களுடையவர், மலர்ந்த முகத்துடன் சிறிது வணங்கியதான சரீரமுடையவர், பிறையுடன் கங்கை சூடிய சடைமுடியர். மூன்று கண்களுடன் நீறு பூசிய மேனியர், சிவகணங்களுக்கு, இயமானராய் இடப்பாகத்தில் தேவியுடன் கூடியவர். சிவ சாருப்யப்பதவியைப் பெற்றதினால் சிவன் போலக் காக்ஷியளிப்பராவார்.

வரலாறு:

சிவபக்தியில் சிறந்த **சிலாதர்** என்ற முனிவர் தனக்குப் பிள்ளையில்லாமையால் தனது பிதிருக்கள் நரகத்தில் இருப்பதையறிந்து தனக்குப் பிள்ளைப் பேறு உண்டாகச் சிவபெருமானை நோக்கிக் கடும் தவம் செய்தார். அத்தவத்தினால் மகிழ்ச்சியுற்ற இறைவன் சிலாத முனிவரின் விருப்பப்படி, புகழ்வாய்ந்த புதல்வனையடைவாய் என்று வரமளித்து மறைந்தார். அச்சிலாத முனிவரும் மகிழ்ச்சியுடன் தனதாச்ரமத்திற்கு வந்து ஒரு வேள்வி செய்வதற்காக பூமியை உழுவித்த போது, அக்கலப்பையின் படைச்சாலில், கோடி மன்மதர்கட்கு ஒப்பான அழகுடன் கனல் போன்ற ஒளியுடன் ஒரு குழந்தை இருக்கக் கண்டு வியந்து நோக்கினார். "இது உனது குழந்தை எடுத்துக்கொள்" என்ற அசரீரி கேட்டது. அக்குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு ஆனந்தித்துத் தமதாச்ரமத்திற்கு எடுத்துச் சென்று சாதகருமம் முதலிய சடங்குகளைத் தக்க காலங்களில் செய்தார். அக்குழந்தை ஏழு ஆண்டு நிறைவதற்குள் சகல வித்தைகளிலும் வல்லுநராக விளங்கியது. அப்போது அங்கு வந்த **மித்ராவருணர்** என்ற இரு இருடிகள் மூலமாகத் தன் தனயனுக்கு எட்டாவது வயதுடன் ஆயுள் முடிவை யுணர்ந்து, சிலாதர் மிகவும் வருத்த முற்றார்.

தந்தையின் துயரத்தை யுணர்ந்த நந்தி தேவர், தந்தைக்கு ஆறுதல் கூறிச் சிவபெருமானை உபாசித்து, இறவாவின்பம் பெறுவேன் என்ற பிரதிக்ஞையுடன் உறுதிகூறி, அந்த ஏழு வயதிலேயே மனதைச் சிவனிடத்திலொடுக்கி இயமனை வெல்ல வேண்டும் என்ற கருத்துடன், உருத்திர மந்திரத்தை இடைவிடாது செபித்து வந்தார்.

வேதம் நான்கும், வேதாங்கம் ஆறும், நியாயம் மீமாஞ்சை மிருதி, புராணம்

என்னும் உபாங்கம் நான்கும் ஆகிய பதினான்கு வித்தைகளுள்ளும், வேதமே மேலானது; அதிலுள்ளும் ஐந்தெழுத்து மேலானது; அதினுள்ளும் **சிவ** என்னும் இரண்டெழுத்தே மேலானது; வேதபுருஷனுக்கு இந்த **உருத்திரம்** கண்ணும், இதனுள் திருவைந்தெழுத்து கண்மணியுமாம்.

இத்துணை சிறப்புற்ற சிவநாமத்தை உள்ளடக்கிய உருத்திர மந்திரத்தை ஒரு கோடி ஜபித்த இறுதியில், சிவபெருமான் காட்சியளித்து யாதுவரம் வேண்டும் என வினவ, மறுமுறையும் ஒருகோடி உருத்திர ஜபம் செய்ய வரமளிக்க வேண்டும் என்றார். அவ்வாறே ஆகுக என்று கூறி மறைந்தார். இம்முறையாக எட்டாவது ஆண்டு முடிவதற்குள் ஏழுகோடி செபத்தை முடித்ததும், பிரசன்னமான இறைவனிடம் எட்டாவது கோடி உருத்திர செபம் செய்ய அனுமதியை வேண்டினார். இதைக் கேட்ட இறைவன் மிகவும் மகிழ்ச்சியடைந்து, நீ செய்த இந்த ஏழு கோடி செபமே போதும். இதற்கு உனக்குச் சிவகணங்களுக்குத் தலைமைப் பதவியை அளிக்கின்றேன் என்று கூறி வெண்பட்டாடை அணிவித்து, தாமரை மலர் மாலையளித்து, கணாதிபத்ய (சிவ கணங்களுக்கு அதிபதி) பட்டாபிஷேகம் செய்வித்துத் தனது சந்நிதியிலேயே இருக்குமாறு கட்டளையிட்டருளினார். அதன் பிறகு கருணை உள்ளங்கொண்ட சிவபெருமான் அம்பிகையுடன் கூட, அந்தத் திருநந்தி தேவருக்கு **மருத்து** என்னும் தேவரின் குமாரியான **சுயசை** என்னும் கன்னிகையை மணம் செய்வித்து மனைவியுடன் கூட தனது சந்நிதியிலிருந்து கொண்டு, சிவ தெரிசனம் செய்பவர்களுக்கு அருள் வழங்கும்படி ஆணையிட்டார். இதை நாவுக்கரசர் 'நந்திக்கருள் செய்தாய் நீயே' என்று பாடியுள்ளார். சிலாத முனிவரின் பிள்ளையாக அவதரித்ததால் **சைலாதி** என்றும் இவருக்குப் பெயர் உண்டு.

இவ்வாறு பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட திருநந்திதேவர் ஸ்ரீ கண்ட பரம சிவனுடைய பேரருளால் ஞானாசாரியராக ஆகிச் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நால்வருக்கும் சற்குருவாய் நின்று சித்தாந்த சாத்திரங்களை உபதேசித்தருளினார். திருநந்தி தேவரிடமிருந்து அருள் பெற்ற சனற் குமாரர், சத்திய ஞானிக்கும், அந்த சத்ய ஞானியானவர் பரஞ்சோதி முனிகளுக்கும் உபதேசம் புரிந்தனர். இவ்வாறு வரிசையாக மெய்கண்டார், அருணந்தி தேவர், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் என்னும் சைவசித்தாந்த சந்தான பரம்பரை தோன்றியதாகும்.

இடபதேவர்:

மற்றொரு நந்தி தேவருக்கு **இடபதேவர்** என்று பெயர், இந்த நந்தி தேவர், சிவ பெருமானுக்கு முன் பிராகாரம் தோறும் வீற்றிருப்பார்.

ஆலயத்தில் பரிவார ஆலயங்கள், பிராகாரங்கள் முதலியவைகளை அமைக்கத் **தண்டம்** என்ற அளவு இன்றியமையாதது, கர்ப்பக்கிரஹத்தின் பின்புறமுள்ள சுவரில் காணப்படும் ஸ்தம்பங்களின் (இருபுறங்களிலும் காணப்படும் கோடித் தூண்) புறவாய்க்குப் புறவாய் அளந்த அளவுக்கு தண்டமானம் (கோல் அளவு) என்று பெயர். இந்த தண்ட அளவின் மூன்றாவது, ஐந்தாவது, ஏழாவது என்ற ஒற்றைப்படையான அளவில், ஒவ்வொரு பிராகாரத்தின் எதிரிலும் விருஷபத்தைத் தாபிக்கவேண்டும்.

இந்த நந்தி தேவரை, உலோகத்தினாலும், சிலையினாலும், இட்டிகையினாலும் (சுற்சாந்து) செய்யலாம். மூன்று பிராகாரமுடைய திருக்கோயிலில் மஹாமண்டபத்தில் உலோக நந்தி தேவரையும், அதற்கு வெளிப்புறமுள்ள பிராகாரத்தில் சிலா நந்தியையும், அதற்கு வெளியிலுள்ள பிராகாரத்தில் சுதை நந்தியையும் வைக்கலாம். எங்கும் சிலையினால் வைப்பதும் ஆகம சம்மதமாகும்.

வடிவம் :

மறைவடிமுள்ளதான நான்கு கால்களை யுடையதாயிருப்பினும், அதர்வணம் என்ற ஒருபாதம் மறைந்திருப்பதால், தோற்றத்தில் மூன்று கால்களையுடைய தாக இருக்கும். முன்னுள்ள ஒருகால் குஞ்சிதமாய் ஊன்றப்பட்டிருக்கும். தருமமே வடிவுடையவராய், படிகமணி போல் மாசற்றவராய், நவரத்தினம் பதித்த பொற்குவளையுடன் கூடிய இரண்டு கொம்புகளுடன் சிவந்த குளம்பு களுடையவராய், நீலநிறமுடைய வால் நுனியுடையவராய், வெளி உதட்டில் படரும் நாவுடன் நீண்டுள்ள வாலின் பக்கத்தில் காணப்படும் விருஷணத்தை (அண்டம்) யுடையவராய், காணப்படு வர். சூரிய சந்திரர்கள் கண்கள்—அக்னி வடிவங்களான கொம்புகள்—உருத்திர தேவரூபமான முகம்.

சிவதெரிசனம் செய்யவரும் பக்தர் களின் பாபங்களை நாவினால் எடுத்துக் களைந்து, அன்பர்களைப் பாவமற்றவராகச் செய்ய வேண்டியதின் பொருட்டு நாக்கை நீட்டிக்கொண்டிருக்கிறார் என்றும்; இறை வனின் உக்கிரமான ஆற்றல்மிக்க வடிவத் தினால் பக்தர்களுக்கு யாதும் தீங்கு நேரா திருக்கவே இறைவனின் முன் அமர்ந் திருக்கிறார் என்றும் மூலாகமம் கூறு கிறது. ஆதலால் சிவபெருமானுக்கும் இடப தேவருக்குமிடையில் குறுக்காகப் போகக்கூடாது. அவ்வாறு சென்றால் பழைமையாகவுள்ள நமது புண்ணியங் கள் நசித்துவிடும்.

அறிவுடை.

இரண்டாயிரம் சதுர்யுகங்கள் நான்முக னுக்கு ஒருநாள். அந்த நாள் முப்பது கொண்டது ஒரு திங்கள். அத்திங்கள் பன்னிரண்டு கொண்டது ஒருவருடம். இவ்வாறு நூறு வருடங்கள் கழிந்தால் நான்முகன் ஆயுட்காலம் நிறைவுறும். நான்முகனின் ஆயுட்காலம் திருமாலுக்கு ஒருநாள். இவ்வாறே திருமாலின் ஆயு ளும் கழியும். திருமாலின் ஆயுட் காலத் தின் முடிவில் உலகங்களும் உயிர்க் கூட் டங்களும் தீயாலழிந்து எங்கும் சுடலை மயமாய்க் காட்சியளிக்கும். அப்போது சிவபெருமான் உமையம்மை காணத் திருநடனம் புரிவான். இவற்றைக்கண்ட தருமதேவதை அஞ்சிச் சிவபெருமானை சரணடைந்து துதித்து 'அடியேன் இறக் கும் தன்மையை மாற்றித் தேவரீருக்கு வாகனமாகும் பேற்றையும் வலிமையும் தாவேண்டும் என வேண்ட, அவ்வேண்டு கோளை ஏற்று நீ இடபவாகனமாக நம் பக்கத்திலெப்போதுமிருப்பாயாக என்று அருளிச் செய்து இடபவாகனமாக ஏற்றார். 'படரொளிச் சடையினன் விடையன்'' என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். திருக்கோயிலுக்குச் சென்று சிவனை வணங்கச் செல்லுபவர் கள் இந்த நந்தி எம்பெருமானிடம் சிவ தெரிசனம் செய்ய அனுமதி பெற்றுச் சென்று, திரும்ப வரும்போது நந்தி தேவருடைய பின்புறம் நின்று. அந்நந்தி தேவரின் கொம்பிடை வழியாக இறை வனைப் பார்த்துத் தரிசித்தால் மஹா பாதகங்கள் போம், விரும்பிய விருப் பங்கள் நிறைவு பெறும். இறைவனருள் கிடைக்கும்.

(செய்திச் சுருக்கம்)

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், நமது அறநிலைய ஆணையர் திரு. எம் **எஸ். சாரங்கபாணி முதலியார்**, பி.ஏ.,பி.எல்., அவர்கள் தொடங்கி வைத்த **வருண ஜெபம்** சிறப்புற நடைபெற்று, அதன் பயனாக நல்ல பெருமழை, தஞ்சை மாவட்டத்தில் பெய்தது. மக்கள் பெரிதும் மகிழ்ச்சி யுற்றனர் .(22—4—1966)

சங்கற்ப நிராகரணம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

9. சிவசமவாதி சங்கற்பம் :

இங்ஙனம் பேதவாதியின் கொள்கைகளை மறுத்த சிவசமவாதி பின்னர்த் தனது கொள்கைகளை எடுத்துக் கூறுகின்றான் ;

பதிபசு பாசம் எனப்படும் முப்பொருள்களுக்கும் உரிய பதிஞானம் பசுஞானம் பாச ஞானம் என்னும் மூவகையான ஞானமும் பழைமையாகவே உள்ளன. பாசஞானம் சுவையொளியூறோசை முதலிய நுகர்பொருள்களை அறிவித்து நிற்கப் பசுஞானமானது தன் பொறிகளின் வாயிலாக அவைகளை அறிந்து நுகர்ந்து வரும். பாசஞான பசுஞானங்கள் நீங்கிய வழி, உயிரானது 'எரியாச் செந்தழல்' போலும் நிலையில் அழிவின்றிக் கிடக்கும். அதுபொழ்து உயிர் அறியும் தன்மையுடைய தெனினும், அதற்கு இஃது என்று ஒரு பொருளையும் சுட்டியறியுந் திறன் இல்லையாகும். இஃது உயிர்களின் கட்டுநிலை.

இவ்வாறு கட்டுநிலையில் நாடோறும் கேவல சகல அவத்தைகளை எய்திவரும் உயிரினை. ஒன்றும் அறியாமற் கிடக்கும் பச்சைப் புழுவினைக் குளவியானது வந்து பற்றுதல் போல, பதிஞானமானது வந்து பற்றும். பச்சைப்புழு தன்னைப் பற்றி எடுத்துச் சென்ற குளவியினையே நினைத்துக் கொண்டிருந்து, அக்குளவியின் உருவத்தினைப் பெறும் தன்மைபோல, உயிரும் தன்னை வந்து பொருந்திய சிவ ஞானத்தால் சிவத்தையே நினைந்து தியானம் செய்து, அச்சிவத்தின் இயல்பினை எய்தும்.

குளவியின் உருவம் பெற்ற புழு, அக்குளவி செய்யும் தொழில்களை எல்லாம் தானும் செய்யவல்லதாய், அக்குளவியுருவம் நீங்காமல், முன்பேயுள்ள குளவிகளின் கூட்டத்தில், தானும் சென்று சேர்ந்திருக்கும் தன்மைபோல—சிவத்தின் இயல்பினைப் பெற்ற உயிரும், சிவத்தின் ஐந்தொழில்களியற்றுந் திறனையும் முற்றறிவியல்பினையும் பெற்றுநின்று, சிவத்தின் இயல்பு மாறுமல், முன்னரே வீட்டுநிலை எய்திச் சிவத்தோடொப்ப விளங்கும் ஏனை நல்லுயிர்களோடு தானும் சென்று கூடிநிற்கும். இஃது உயிர்களின் வீட்டு நிலையாம் எனச் சிவ சமவாதி கூறிமுடித்தான்.

10. சிவசமவாதி நிராகரணம் :

சிவசமவாதி தன் கொள்கைகளைக் கூறிமுடித்ததும், அடுத்திருந்த சங்கிராந்தவாதி அவற்றை மறுத்துரைக்க முற்படுகின்றான்:

பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூவகை ஞானமும் ஓரொரு நிலையில் ஒவ்வொன்ருகச் செயற்படுதல் அன்றி, ஒரே நிலையில் மூன்றும் சேர்ந்து செயற்படுதல் இல்லை. செயற்படுமாயின், கண்ணனது அழகிற் சிறந்த பொருள் ஒன்றனைக் காண்புழி ஞாயிறு திங்கள் விளக்கு என்னும் மூன்றனுள் ஒன்று அதனைக் காட்டக் காண்பதன்றி, அம்மூன்றும் ஒருசேரக் கூடிநின்று காட்டக் காண்பதில்லை. ஆதலின் மூவகை ஞானமும் கூடி நின்றே ஒரு பொருளை அறியவேண்டும் எனக் கூறிய நின் கருத்து அமையாது.

(தொடரும்)

CONNEMARA PUBLIC LIBRARY

திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சி

மஹாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி

தூமணிமாடத்து — திருமழிசையாழ்வார்

தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரியத்
தூபம்கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான்மகளே ! மணிக்கதவந்தாள் திறவாய்
மாமீர் ! அவளையெழுப்பீரோ
உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்.

நம்மாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான திருமழிசைப் பிரானை யுணர்த்தும் பாசுரமிது. இதில் மாமான் மகளே ! என்ற விளி ஒருவகையான தேஹஸம்பந்தத்தில் நோக்குடையது. ஆண்டாளுக்கும் திருமழிசை யாழ்வார்க்கும் ஒரு வகையான தேஹஸம்பந்தமுண்டு. அதாவது — கோதாஸ்துதியில் "கமலாமிவாங்யாம் கோதாம்' என்றும் 'ஸத்த:பயோதி து:ஹிதுஸ் ஸஹஜாம்' விதுஸ் த்வாம்" என்றும் அருளிச் செய்தபடியே ஆண்டாள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியாவாள். "பார்க்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா', என்ற அமரகோசத்தின்படியும் இதிஹாஸ புராண வரலாற்றின் படியும் லக்ஷ்மி (ஆண்டாள்) ப்ருகு குலத்தில் தோன்றியவள். திருமழிசைப் பிரானும் ப்ருகு குலத்தில் தோன்றியவரென்பது சரித்திர ப்ரஸித்தம். இத்தகைய ஸமாந குலஸம்பந்தம் இங்கு நோக்கத்தக்கது. ரிஷி குலத்திலே பிறந்து பிரம்பன் குடியிலே யானார் அவர். ப்ராஹ்மண குலத்திலே பிறந்து கோபாலர் குலத்திலேயானாள் இவள். இதுவும் ஒற்றுமை நயம். ஆண்டாள் கோபஜன் மத்தை ஆஸ்தானம் பண்ணினதாக ஸ்ரீவசனபூஷணம்.

[தூமணி மாடத்து] சிறந்த மாணிக்கக் குப்பியினுள்ளேயுள்ளது வெளியில் நிழலிட்டுத் தோன்றும். திருமழிசைப்பிரான் "உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று வேண்டிக்கொண்டபடியே உள்ளிருந்த திருமால் அப்படியே வெளியிற் பொசிந்து காட்சி தந்தமையால் இவர் தூமணிமாடமென்னத் தகுதியுடையார். [சுற்றும் விளக்கெரிய] விளக்காவது ஞானவொளி, "சாக்கியங் கற்றோஞ் சமண் கற்றோம் சங்கரனாராக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்" என்றபடி இவ்வாழ்வார் ஸகல மதங்களிலும் புக்கு ஸர்வதோமுகமான ஞான விளக்கம் பெற்றவராதலால் சுற்றும் விளக்கெரிதல் இவர்க்கு அஸாதாரணம். "யானறிந்தவாறு—ஆரறிவார்" என்றும் "என் மதிக்கு விண்ணெல்லாமுண்டோ விலை" என்றும் இவரது பாசுரங்களினாலும் இது ஸித்தம். [தூபம் கமழ] சிறந்த ஞானமிருந்தால் மாத்திரம் பயன்படாது: அது நன்கு பரிமளிக்கவேண்டும், எம்பெருமானையன்றி வேறொரு தெய்வத்தைத் தொழாதிருத்தலே ஞானத்திற்குப் பரிமளம். "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்பது இவ்வாழ்வாருடைய திருவாக்காகும். [அன்றியும், தூபம் கமழ வென்றது புகை சூழ வென்றபடியாதலால் இவ்வாழ்வாருடைய சரித்திரத்தில் புகை சூழ்ந்த கதையுமுள்ளது, அதாவது, ஆகாச மார்க்கத்தில் வ்ருஷபாரூடராய்ச் சென்றுகொண்டிருந்த பார்வதீபதி (திருமழிசையில்) இவரை யணுகி ஸம்பாஷித்தபோது விவாதம் விளைய, பரமசிவர் தமது நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணைத் திறந்துவிட்டுப் பொறியும் புகையும் சூழும்படி செய்ய, ஆழ்வார் தமது வலத்திருவடியின் பெருவிரலிலுள்ளதொரு கண்ணைத் திறந்துவிட்டு அதினின்றும் பெருந்தீயைக் கிளப்பிவிட்டுப் புகை சூழச் செய்தாரென்பது. அது இங்குத் தூபங் கமழ வென்பதனால் நினைவூட்டப்படுகிறது.

[துயிலணை மேல் கண்வளரும்] இவ்வாழ்வாருடைய திருக்கண் செல்வது சயனத்திருக்கோலமான எம்பெருமான்களின்மீதுதான். கச்சி வெஃகாவிலும் திருக்குடந்தையிலுமே பெரும் பாலும் இவர் காலம் கழித்தது. சயனத்திருப்பதிகளையே ஒரு கோர்வையாகவெடுத்துப் பாசுரம் பாடினவரும் இவ்வாழ்வார்; "நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள் நாகத்தணை யரங்கம் பேர் அன்பில்—நாகத்தணைப் பாற்கடல் கிடக்கு மாதி நெடுமால், அணைப்பார் கருத்தனவான்" என்றது காண்க. [துயிலணை மேல் கண்வளரும் மாமானுடைய மகளே!] மகள் என்றதனால் விதேயத்வம் சொன்னபடி. மகள் சொற்படி தந்தை கேட்பதும் தந்தை சொற்படி மகள் கேட்பதும் இயல்பு. மாமான் என்றது மஹா மஹான் என்றபடி. துயிலணைமேல் கண் வளரும் மாமான் யதோக்தகாரி யெம்பெருமான். அப்பெருமாள் இவ்வாழ்வார் சொற்படி கேட்டவர்; 'கணிகண்ணன் போகின்றான் — நீயு முன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்ற போது அப்படியே சுருட்டிக் கொண்டு புறப்பட்டார்; "உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக் கொள்" என்ற போதும் அப்படியே. இனி, துயிலணை மேற் கண் வளரும் மாமான்—ஆராவமுதன்; அப்பெருமாளும் "எழுந்திருந்து பேசுவாழி கேசவனே" என்ற இவ்வாழ்வாரது வேண்டுகோளின்படி எழுந்திருந்தவர் என்பது ப்ரஸித்தம். * [மாமீர் அவளை யெழுப்பீரோ?] இவ்வாழ்வார்க்கு நல்ல போதத்தை யுண்டாக்கியருளின பேயாழ்வாரை மாமீரென்கிறது.

[உன் மகள் தான் ஊமையோ] வாய் திறவாமலே ஹஸ்தசேஷ்டை முதலியவற்றால் காரியம் செய்வது ஊமைகளின் பணி. இவ்வாழ்வாரும் யாத்திரை யடையில் பெரும்புலியூரென்னும் கிராமத்தில் ஒரு வேதியன் வீட்டுவாசல் திண்ணையில் சிறிது பொழுது எழுந்தருளியிருக்க அங்கு வேதமோதிக் கொண்டிருந்த அந்தணர்கள் நீறுபூத்த நெருப்புப் போலுள்ள ஆழ்வாருடைய மஹிமையைத் தெரிந்து கொள்ளாமல் அவரைக் கீழ்ச்சாதியராக வெண்ணி வேதாத்யயனம் அவருடைய காதிற் படலாகாது என்று கருதி ஓதுதல் தவிர்ந்திருக்க, அக்குறிப்பை யறிந்த ஆழ்வார் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற்சென்று வேறோரகத்து மேடையில் வீற்றிருக்கையில் அந்த வேதியர்கள் மீண்டும் வேதமோதத் தொடங்கி, விட்ட வாக்கியம் தோன்றாது மயங்கி, இது இவரிடத்தில் பட்ட அபசாரத்தின் பலனென்று தெளிந்து அனைவரு மோடி வந்து திருவடிகளில் விழுந்து வணங்கி 'விட்டவேத வாக்கியத்தை நினைவூட்ட வேணுமென்று பிரார்த்திக்க ஆழ்வார் திருவுள்ளமிரங்கி, வேதவாக்கியத்தைத் தம் வாக்கினால் உச்சரியாமலே அங்கு வீதியில் உலர்த்தி யிருந்த நெற்குவியலிலிருந்து கறுப்பு நெற்களை யெடுத்துக் கையுகிராலே இடந்துபோட, அப்பொருளுள்ள வேதவாக்கியம் அவர்கட்குத் தோன்றிற்று; அதாவது—"க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்ப்பிந்தம்" என்பது. உடனே அவர்கள் ப்ரதக்ஷிண ப்ரணமாதிகளால் இவரை உபசரித்து க்ருதார்த்தராயினர் என்பது சரித்திர வரலாறு. இங்ஙனமாக வாய்திறவாமலே, இங்கிதத்தினால் காட்டினதுபற்றி ஊமையோ என்றது. சொன்ன சொற்களைச் செவியேற்காதவர் செவிடர்; அந்தச் செவிடும் இவரது சரிதையில் ப்ரஸித்தம்: முன்சொன்ன பெரும்புலியூரில் அந்தணரடிகள் யாகஞ் செய்துகொண்டிருந்த விடத்தில் இவ்வாழ்வாரை எழுந்தருள்வித்துக்கொண்டு போய்ச் சில மஹான்கள் இவர்க்கு அக்ர பூஜை செய்விக்க, அப்போது அங்கிருந்த பல சிசுபாலஜ்ஞாதிகள் எண்ணிறந்த வசைமொழிகளை வர்ஷிக்க, இவ்வாழ்வார் செவியேற்காதிருந்தனர் என்ற வரலாறு காண்க.

[அனந்தலோ] தூக்கமோ? என்றபடி. பரமைகாந்திகட்குத் தூக்கமாவது பாஹ்ய விஷயங்களிற் சிறிதும் நெஞ்சு செல்லாதிருக்கப் பெறுதலே. "உன்னைத் தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றும் "தொழிலெனக்குத் தொல்லை மால் தன்னாமமேத்தப் பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்று மருளிச் செய்யு மிவ்வாழ்வார்க்கு இந்த நிலைமையே அனந்தலாகும். [மந்திரப் பட்டாளோ] மற்றையாழ்வார்களுக்கு ஆசார்ய ஸமாச்ரயணமும் மந்த்ரோப தேசமும் ஆனது தெரியாது. இவர் பேயாழ்வாரிடத்தில் மந்திரப்பட்டது ப்ரஸித்தம். இதை இங்குத் தெரிவித்திருப்பது முக்கியமான சான்று.

[மாமாயன்] இவ்வாழ்வார் திருச்சந்த விருத்தத்தில் "மாயமென்ன மாயமே" என்றும், "மாய மாய மாக்கிஞய் உன்மாயமுற்று மாயமே" என்றும் பலகாலும் எம்பெருமானது மாமாயங்களைப் பேசினவர். [மாதவன்] "மாதவனே ஏத்தாதார் ஈனவரே" என்றவர் இவ்வாழ்வார். [வைகுந்தன்] "வைகுந்தச் செல்வனர் சேவடிமேல் பாட்டு' என்றவர் இவ்வாழ்வாரே. வைகுந்தனது சேவடி மேல் தாம் பாசுரம் பாடினவராகச் சொல்லிக் கொண்டார். ஆகவே, மாமாயன், மாதவன், வைகுந்தனென்ற திருநாமங்கள் இவ்வாழ்வார்க்குப் பரமபோக்யங்களென்பது ஸூசிதம். (172)

நோற்றுச்சுவர்க்கம்—பேயாழ்வார்

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத்துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனல்
பண்டொருநாள்

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும்
தோற்றுமுனக்கேபெருந் துயில்தான்
தந்தானே

ஆற்றவனந்தலுடையாய்! அருங்கலமே
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய்.

திருமழிசை யாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான பேயாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. ஓடித்திரியும் யோகிகளாய் ஒருவரோடு ஒருவர் சேராமல் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த பொய்கையார் பூதத்தார் பேயார் இம்மூவரையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கக் கருதிய எம்பெருமான் ஒரு பெருமழையை வியாஜமாக்கித் திருக்கோவலூரிடைகழியில் சேர்த்து நெருங்கி யநுபவித்தானென்பது வரலாற்றின் சுருக்கம். இப் பேயாழ்வாரைப் பற்றித் திருவரங்கத்தமுதனர் நூற்றந்தாதியில் அருளிச்செயுமிடத்து "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னேடு மாயனைக் கண்டமை காட்டுந் தமிழ்த்தலைவன்" என்ருர். பொய்கையாரும் பூதத்தாரும் இருவிளக்கேற்றியிருளையகற்ற இவ்வாழ்வார், "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கிப் பலாநுபவம் செய்தருளினர். அவ்வர்த்தமே யிங்கு முதலடியிற் பொலியும். நோற்று—மற்றையிரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றுகையாகிற உபாயாநுஷ்டானஞ் செய்ய என்றபடி. சுவர்க்கமாவது ஆனந்தாநுபவம். "யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்கோ நிரயோ யஸ் த்வயா விநா" என்று ஸ்ரீராமாயணத்தில் பிராட்டி அருளிச்செய்ததுங் காண்க.

"வாசல் திறவாதார்" என்றது பேயாழ்வார்க்கு மிகவும் பொருத்தமான லிங்கம். திருக்கோவலிடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார்; பிறகு பூதத்தார் வந்து சேர அவர்க்கு அப்பொய்கையார வாசல் திறந்தார். பிறகு வந்து சேர்ந்த பேயார்க்குப் பூதத்தார் வாசல் திறந்தார். இப்பேயார்க்குப் பிறகு ஒருவரும் வந்து புகாமையினல் வாசல் திறக்கவேண்டிற்றில்லை. ஆகவே வாசல் திறவாதார் என்றது பேயாழ்வார்க்கு மிகப்பொருத்தமாக அமைந்த குறிப்பு [நாற்றுத்துழாய்முடி நாராயணன்] இவ்வாழ்வாருடைய பாசுரங்கள் திருத்துழாய் மயமாகவேயிருக்கும். *திருக்கண்டேனுக்கு அடுத்த பாசுரம் "பொன்தோய்வரை மார்பில் பூந்துழாய்" என்பது, அதற்கடுத்த பாசுரம் "மலராள் தனத்துள்ளனே தண்டுழாய் மார்வன் என்பது. முடிவுபாசுரத்திலும் "தண்டுழாய்த் தார் வாழ் வரைமார்பன்" என்ருர். இடையிலும் பல பாசுரங்கள் காண்க. ஒன்பதாவது பாசுரத்தில் [நாமம் பலசொல்லி—யென்பதில்] நாராயணனையும் திருத்துழாயையும் கண்ணனையும் சேர்த்துப் பாடினர் பேயார். இதுவும் ஒரு சிறந்த பொருத்தம். "நாமம் பல சொல்லி நாராயணவென்று, நாம் அங்கையால் தொழுதும் நன்னெஞ்சேவா—மருவி மண்ணுலகமுண்டுமிழ்ந்த வண்டறையுந் தண்டுழாய்க் கண்ணனையே காண்க நங்கண்" என்ருர். "காண்காணென விரும்பும் கண்கள்" என்று ஒரு நொடிப்பொழுதும் கண்மூடியிருக்கமாட்டாமையைச் சொல்லிக்கொண்ட நீர் கும்பகர்ணனுக்கும் மேலாக இன்னமும் துயில் கொள்ளல் தகுதியோ என்கிருள் பண்டொருநாளென்று தொடங்கி.

கும்பகரணன் பேயாழ்வார்க்குத் தோற்றதைப்பற்றின விவரணம்;—கும்பகரணனென்று மூல ஸ்ரீஸூக்தியே யொழிய கும்பகர்ணனென்றில்லை. கும்பத்தைக் காரணமாக [ஜன்ம பூமியாக] வுடையவர் அகஸ்த்யர்; "அகஸ்த்ய

கும்ப ஸம்பவ:'' கூற்றத்தின் வாய் வீழ்ந்த என்றது யமனுடைய திசையாகிய தக்ஷிண திக்குக்குத் தலைவரான என்றபடி. "தக்ஷிண திக்க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா'' என்ற ஸ்ரீராமாயணம் காண்க. ஆகஸ்த்யமென்று ப்ரஸித்தமான தமிழ்ப் பாஷைக்கு ப்ரவர்த்தகரான அம்முனிவர் பேயாழ்வார்க்குத் தோற்றாரென்றது அவரிலும் மிக்க தமிழ் வல்லவரென்றபடி. இராமானுச நூற்றந்தாதியில் இவ்வாழ்வாரை ப்ரஸ்தாவிக்கிற* மன்னிய பேரிருள் மாண்டபின்* என்கிற பாசுரத்தில் இவர் "தமிழ்த்தலைவன்'' என்றே வ்யபதேசிக்கப்பட்டிருப்பது காண்க.

இப்பாட்டில் நட்ட நடுவில் இராமபிரானுடைய திவ்ய சரித்திரமொன்றை ஆண்டாள் அமைத்தது பேயாழ்வாருடைய திருவந்தாதியில் நட்டநடுவில் "அவனே—இலங்காபுரமெரித்தானெய்து'' என்றும் 'எய்தவும் தென்னிலங்கைக் கோன்வீழ'' என்றும் அருளிச்செய்தமைக்கு நன்கு ஒக்கும். [அருங்கலமே] எம்பெருமானது திருவருளை மிக அருமையாகப் பெற்ற ஸத்பாத்ரமே! என்றபடி. பாசுரம் தொடங்கும் போதே "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்'' என்று ஆனந்தமாகத் தொடங்கப்பெற்ற பகவத் பரமக்ருபா பாத்ர பூதர் மற்றொரு ஆழ்வாரில்லையே. [தேற்றமாய் வந்துதிற] உம்முடைய திருநாமமோ பேயார்; பேய்த்தனமாக வாராமல் தேறி வந்து திறவும் என்கிறாள் போலும். ... ... (173)

கற்றுக்கறவை—பூதத்தாழ்வார்.

கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம்
பொற்கொடியே
புற்றரவல்குற் புனமயிலேபோதராய்
சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து நின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாட,
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டி நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோ
ரெம்பாவாய்.

பேயாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான பூதத்தாழ்வாரை யுணர்த்துவது இப்பாட்டு. இதில்* குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!* என்ற விளியானது பூதத்தாழ்வாரை இப்பாசுரத்திற்கு விஷய பூதராக நிஸ்ஸந்தேஹமாய் நிலைநாட்டுகின்றது. எங்ஙனேயென்னில்; கீழ்ப்பாசுரமும் இப்பாசுரமும் மேற்பாசுரமும் பேயார் பூதத்தார் பொய்கையார் என்ற முறையில் முதலாழ்வார்களை யுணர்த்துவனவென்பது தெரிவித்த விஷயம். இவ்வாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூரில் ஒன்று சேரப் பெற்றவர்களென்பதை ஆண்டாள் இப்பாட்டில் மிகவும் ஸ்பஷ்டமாகவே காட்டிவிட்டாள். கோவலர் என்னுஞ் சொல் இடையர்களைச் சொல்லுமதாகையாலே இந்நூலில் பல பாட்டுகளில் இச்சொல் இருக்கலாம் : ஆனால் இந்தப் பாசுரமொன்றில் தானுள்ளது. கோபாலர் என்ற வடசொல் கோவலர் என்று திரிந்ததாகக் கொள்வது உள்ளதே. திருக்கோவலூரைக் கோவல் என்று திவ்வியப் பிரபந்தம் பலவிடங்களில் நிர்தேசிக்கின்றது; கோவலர் என்றது கோவலூரைச் சேர்ந்தவர்களென்று எளிதாகப் பொருள் பெறுகின்றது. இதனால் முதலாழ்வார்கள் மூவரும் கொள்ளப்படுகிறார்கள். இவர்களேயன்றோ கோவலூரைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குக் குற்றமொன்றில்லாத என்னும் விசேஷணம் மிகவும் ரஸமாகப் பொருந்துகின்றது. மற்றுள்ள ஆழ்வார்களுக்கெல்லாம் யோநிஜத்வமாகிற ஒரு குற்றமுள்ளது. இம்மூவரும் அயோநிஜர்களென்பது ப்ரஸித்தமாகையாலே குற்றமொன்றில்லாதவர்களாயினர். இவர்களுக்குள்ளே பொற்கொடியாக விளங்குபவர் பூதத்தாழ்வார் எங்ஙனேயென்னில், இவ்வாழ்வார்தாம் தமது (இரண்டாந்) திருவந்தாதியில் "கோல்தேடியோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மனம்'' என்றருளிச் செய்தார். கொள்கொம்பைத் தேடியோடுவது கொடியாதலால் அப்படிப்பட்ட கொடியாக இவ்வாழ்வாரே தம்மைக் கூறிக்கொண்டார்.

ஆக, கோவலர்தம் பொற்கொடியே! என்ற விளி. திருக்கோவலூரில் ஒன்று சேர்ந்த ஆழ்வார்கள் மூவருள் கொடியென்று வியபதேசிக்கப்பெற்ற பூதத்தாழ்வாரே! என்கிற பொருளை ஸ்பஷ்டமாகத் தந்ததாயிற்று. கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்தவர் முதலாழ்வார் மூவருமாவர். எங்ஙனேயென்னில்; கன்று+கறவை, கற்றுக்கறவை. கன்றாகிய கறவை

யென்றபடி. காமதேனுக்களான இவ்வாழ்வார்களிடமிருந்து பால்போல் வெளிவரும் ஸ்ரீஸூக்தியே கறவையெனக் கொள்ளத்தக்கது. கணம் என்கிற வடசொல் அளவைச் சொல்லுமது. மற்றையாழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களையளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்ஙனன்றிக்கே வெண்பாவாகிய மிகச் சிறிய பாசுரங்களையளித்தார்கள். பொய்கையாழ்வாரருளிய திருவந்தாதி சறவைக் கணம்; பூதத்தாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள்; பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசந பஹுவசநங்கள் இணங்கின அழகு காண்க.

செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்—தேசமெங்கும் திரிந்து பகவத்விரோதிகளை நிரஸித்து எங்கும் புனிதமாக்கவேணுமென்கிற அர்த்தத்தை "எண்டிசையும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகராமின் திரிந்து" என்ற பாசுரத்தினல் வெளியிட்டவர் பூதத்தாழ்வாரே. புற்றரவல்குல்" என்பது இடையழகை வருணிப்பதாகும். ஸ்வாபதேசத்தில் இடையழகாவது பக்தியின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில் பக்தியானது இடைப் பட்டதாதலால் இடையழகென்பது பக்தியின் அழகேயாகும். இவ்வாழ்வார் தம்முடைய திருவந்தாதியை* அன்பே தகளியா* என்று அன்பிலே தொடங்கி, முடிக்குமிடத்தும் "என்றனளவன்ருல் யானுடைய வன்பு" என்று முடித்தார். இதனுல் இவரது இடையழகு நன்கு வெளிப்பட்டதாயிற்று. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக்கட்டினவர் இவரேயாவர். புனமயிலே! என்றவிளியும் இவர்க்கு அழகாகப்பொருந்தும். பொழிலிடத் தேவாழும் மயில்; இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல்மல்லை; அதனைப்பாடின கவியன் "கடிபொழில்சூழ் கடன்மல்லை" என்றே பன்முறையும் பாடினர். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூஹல முடைத்தாதலால் மேகம் நீர்பருக வருமிடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும். இவ்வாழ்வார் நின்றவிடமும் கடற்கரையிலேயாம். [சுற்றத்துத் தோழிமா ரித்யாதி] இவர்க்குப் பொய்கையாரும் பேயாரும் சுற்றத்தவர்கள்; மற்றையாழ்வார்கள் தோழிமார். [முகில்வண்ணன் பேர்பாட] "உலகேழும் முற்றும் விழுங்கும் முகில்வண்ணன் பூம்பாடகத்துளிருந்தானை ஏத்துமென்னெஞ்சு" என்ற (94) இவர் பாசுரம் காண்க. புனமயில் முகில்வண்ணனைத் தானே பாடும். ... (174)

கோயில் நிகழ்ச்சிகள்

சித்ரா பருவத் திருவிழா:

ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், எட்டிகுடி, நாகை வட்டம்	25-4-66 முதல்
தஞ்சை மாவட்டம். ...	4-5-66 வரை

பிரம்மோத்ஸவ விழா:

1.	தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீபிரகதீஸ்வர	14-4-66 முதல்
	ஸ்வாமி கோயில் (பெரிய கோவில்), தஞ்சை. ...	3-5-66 வரை
2.	ஸ்ரீசாமவேதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருமங்கலம்,	24-4-66 முதல்
	லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம். ...	4-5-66 முதல்
3.	காளத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம், ஸ்ரீஅபிராமி	22-4-66 முதல்
	ஸமேத பத்மகிரீஸ்வர சுவாமி, திண்டுக்கல். ...	3-5-66 வரை

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

உடையவர் வெள்ளை சாத்திக்கொண்டு மேற்றிசையாக எழுந்தருளினமை பார்த்தோம். அவர் ஸ்தானத்தில் கூரத்தாழ்வான் வெறிபிடித்த சோழனின் சபைக்குச் சென்றமையும் பார்த்தோமல்லவா? அங்கிருந்து நாலூரான் வந்தவர் உடையவரில்லை என்பதை அரசனுக்கு அறிவிக்க அவனும் மிகக் கோபமுற்றவனாய், ஏவலாளரை அனுப்பி எப்படியேனும் உடையவரைக் கண்டு பிடித்துக்கொணருமாறு கட்டளையிட்டான். அவர்களும் திருவரங்கம் வந்து உடையவர் சென்ற திசையை அவரைத் தொடர்ந்தனர். உடையவரோ இப்படி நிகழக்கூடும் என அறிந்தவராதலின், அதிகம் இடையிலே தங்காது வேகமாகவே சென்றார். எனினும் காவலர் நெருங்கி விட்டனர்' முதலிகள் பதறினர் உடையவர் அவர்களை அஞ்சன்மின் என்றருளித் தம் கையினால் கீழிருந்து ஒரு பிடி மணலை எடுத்தார். நம்பெருமாளைத் தியானித்து "கொடுமை செய்யும் கூற்றமும் என் கோலாடிக்குறுகப் பெறா, தடவரைத்தோள் சக்ர பாணி சார்ங்கவிற் சேவகனே" எனஓதி அம் மணலைத் தாம் போம் வழியெல்லாம் தூற்றிக் கொண்டே சென்றார். பின்னே வந்த காவலர்கள் அம்மணலை மிதித்தவாறே தம் புத்தி தடுமாறி மயங்கியவர்களாய், திசை தெரியாது திகைத்து, கால்கள் ஓய்ந்து அடியெடுக்க முடியாதபடி சோர் வெய்தி, முன்னே செல்லும் பார்ப்பார் ஏதோ மந்திரம் செய்திருக்கிறார். மேலும் செல்வோமாயின் என்ன விளையுமோ என அஞ்சியவர்களாய் வந்த வழியே மீண்டனர்.

உடையவரும் முதலிகளும் தம் பயணத்தைத் தொடர்ந்தனர். இவர்களைத் தொடர்ந்து கூட வேண்டும் என்று இவர்கள் சென்று சிலகாலம் கழித்துப் புறப்பட்ட ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் மேற்றிசையே சென்றாரேனும், இவர்கள் செல்வழியின்றி மற்றோர் வழியாகச் சென்றவர் நீலகிரிச் சாரலிலே ஏழாம் நாள் போய்ச் சேர்ந்தார். அச்சாரல் வேடர்கள் உறைவிடமாயிருந்தது. அவ்வேடர்களுள், நிலங்களை உழுது கொண்டிருந்தவர், ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் மிகக் களைப்போடு வருவதைக் கண்டு மிகவும் வருந்தி, உழவை நிறுத்தி வந்து அந்த ஸ்ரீ வைஷ்ணவரிடம் "ஸ்வாமி! எங்கு நின்று எழுந்தருளுகிறதோ?" என்று கேட்க அவர்களது வாய்மொழிச் சிறப்பை வியந்த அவரும், 'கோயில் நின்றும் வருகிறேன்' என்ன, வேடர்கள் மிகவும் களிப்புற்று "அப்படியா! அங்கே நம்பெருமாள் செல்வம் நன்றாகவுள்ளதா? எம்பெருமானார் திருவடிகளுக்கு ஒருகுறைவுமில்லையே?" என்று பரிவோடு வினவினர். வந்த பிராமணர் சோகம் நிறைந்த குரலில் "என்ன எம்பெருமானாரும் என்ன திருச்செல்வமும்! எம்பெருமானார் வெள்ளை சாத்தி இப்புறமாக எழுந்தருளினர். அவரைச் சேர வேண்டுமென்றுதான் நான் வந்தேன். எவ்வழியாக அவர் சென்றுள்ளார் என்று தெரியாது அலைகிறேன்" என்று பதிலிறுக்க, வேடர்களும் நடந்தவற்றை அவரிடம் கேட்டு மிகவும் வருந்தி உணவருந்தாதே, ஆறு நாள் பட்டினி கிடந்தனர்.

உடையவரும் முதலிகளும் அப்படியே ஆறு நாள் பட்டினியாய் ஏழாம் நாள் இரவு இந்நீலமலைச் சாரலருகே வந்தனர். அப்புனத்திலே ஒரு விளக்கொளி தெரியக்கண்டு உடையவர் அனைவரையும் அங்கே செல்லப் பணித்தார். சென்றவர்கள் வழியின் குறுக்கே படலைவைத்து வேலியிருக்கக் கண்டு முதலிகளில் ஒருவர் 'வழியெங்கே பிள்ளைகாள்' என்று குரல் கொடுக்க, அங்கிருந்த வேடர்கள் 'ஏது குரல் பிராம்மணக்குரலாயிருக்கிறது: பெருவிடாயோடேயும் இருக்கிறது!' என்று வேலியைப் பிரித்து "இப்படி வாருங்கள்" என்று குரல் கொடுக்க, உடையவரும் முதலிகளும் குரல் வந்ததிசை வழியே சென்று அவர்கள் குடிலை அடைந்தனர். அவர்கள் வரும்போது பெருமழையாயிருந்தமையின் உடைகள் யாவும் நனைந்திருந்

தன. பார்த்த வேட முதலிகள், வந்தவர் சாத்தியிருந்த திருப்பரிவட்டங்களைக் களையச் சொல்லி, நெருப்பை மூட்டி அதில் காயவைத்துக் குளிரில் நடுங்கும் திருமேனியெங்கும் சூடு பிறக்க ஒற்றி "நீங்கள் எங்கிருந்து எழுந்தளுகிறீர்கள் ?" என்று ஆதரத்தோடு வினவினர். அவர்கள் "கோயில் நின்றும்" என்று பதிலிறுக்க, வேட்டுவர்கள் "அங்கே எம்பெருமானர் பாங்காய் எழுந்தருளியிருக்கின்ருரா" என்று ஆர்வத்துடன் கேட்டனர். முதலிகள் வேடர்கள் எம்பெருமானர் பாங்கை வினவுவதைக் கண்டு அதிசயித்து "எம்பெருமானரை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்" என வினவினர். வேடமுதலிகளும் "அடியோங்கள் நல்லான் சக்கரவர்த்தியின் சீடர்கள். அந்தஸ்வாமி எங்களுக்கு இதமுரைக்கும் போதெல்லாம் த்வயத்தை உபதேசித்து நம்மெல்லோர்க்கும் எம்பெருமானரே பரமாசார்யர். அவர் திருவடிகளே தஞ்சம் என்று கொண்டிருங்கள்" என்று அருளிச் செய்துள்ளார்" என்று பணிவோடு விடையிறுத்தனர். கேட்ட உடையவர் "ஓஹோ நல்லான் என்ற காளமேகம் நடுக்காட்டில் வர்ஷித்ததோ (பெய்ததோ)" என்று வியந்தருளினர். முதலிகள் அவரை "இவர்தான் எம்பெருமானர்" என்று வேடமுதலிகளுக்குக் காட்ட அவர்களும் உடையவர் திருடிகளிலே விழுந்து மிகவும் வியாகுலப்பட்டனர். உடையவர் அவர்களை மகிழ்ச்சியோடு குளிரக் கடாக்ஷித்து எழுமாறு பணித்தார். அவர்கள் எழுந்து சென்று தினையரிசியையும் தேனையும் நிறையக் கொணர்ந்து ஸமர்ப்பித்து இதனை வறுத்திடித்துத் தேனேடு கலந்து அமுது செய்து அருளவேணும் என்று பிரார்த்திக்க, அவர்களும் பரிவினில் தழுவிய அப்பவித்ர பதார்த்தங்களைப் பெற்றுத் தினையை வறுத்திடித்துத் தேனில் குழைத்து உடைவருக்கும் ஸமர்ப்பித்து தாமும் அருந்திப் பசியாறினர். அனைவரும் வேடர் குடிலிலே கண்வளர்ந்தருளினர்.

மறுநாள் விடியற் காலையில் முதலிகளில் ஒருவரையும், வேட முதலிகளில் ஒருவரையும் கோயில் சென்று, க்ஷேம சமாசாரம் அறிந்து வர அனுப்பி, மற்றையவும் மேற்றிசை நோக்கிப் பயணம் துவக்கினர். கோயில் சென்ற முதலிகள் திரும்புகையில் நாற்பத்தைந்து முதலிகள் உடன்வந்தார்கள் என்று வார்த்தாமாலை கூறும். வந்தவர் நானூற்று நாற்பத்தைவர் என ராமாநுஜார்ய திவ்ய சரிதை கூறும்.

மேற்றிசை நோக்கிச் சென்ற உடையவர் கோஷ்டி ஆறுகாதம் தூரம் போனதும், உடன் வந்த வேடர்கள் அங்கே ஒரு வேட முதலியின் வசம் இவர்களை ஒப்புவித்து மீண்டனர். அவன் பகலெல்லாம் வேட்டையாடிவந்தவன், பிராமணர் பசித்திருக்க நாம் உண்ணலாகாதே என்று கருதியவனாய், அவர்களைக் கொள்ளேகாலம் என்ற அக்ரகாரத்தில், கட்டளை வாரியான் என்ற ஒரு அந்தணன் அகத்திலே எழுந்தருளப் பண்ணி வேண்டும் கட்டளைகளும் (உணவுக்குரிய பதார்த்தங்கள்) கொடுத்து அவர்களை விரைவில் அமுது செய்விக்கும்படி கூறிச் சென்றான். அவ்வந்தணனுடைய பத்னி முதலிகளை நோக்கி 'உங்களுக்கு அமுது செய்யவேண்டாவோ என்ன இவர்களும் ஏதோ உளத்தில் ஐயமுற்றவர் போல் உண்ணவேண்டாம் என்று பதில் கூறினர். அவ்வம்மையார் இவர்களது ஐயத்தை உணர்ந்தவளாய் 'அடியேனும் எம்பெருமானர் திருவடி ஸம்பந்திதான்' என்று விண்ணப்பித்தாள். முதலிகள் நீர் அவர் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்ததெப்படி ?" என்று வினவ அவ்வம்மையாரும் தன் முன் சரிதத்தைக் கூறினாள் (அது முன்னே கொங்குப் பிராட்டி சரிதமாகக் கூறப் பெற்றுள்ளது). இதனைச் செவிமடுத்த உடையவர் 'அங்கே நடுக்காட்டில் நல்லான் என்ற காளமேகம் கனமழை பெய்திருக்கக் கண்டோம். இங்கே பழைய ஸம்பந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது! அழகிது! அழகிய மணவாளன் நமக்கு வழித்துணையாகவே வருகிறார்' என உள்மகிழ்ந்தார், எனினும் இவள் நம் திருவடியை நெடுங்காலம் முன்பு ஆச்ரயித்தாள். இப்போது வசிக்கும் தேசமும் வேறு. இவள் தற்கால அநுஷ்டானம் எவ்விதமுள்ளதென்று சோதிக்க வேணும் என்று திருவுள்ளம் பற்றியவராய் அவ்வம்மையாரை அமுது தயாரிக்கப்பணித்து ஒரு முதலியை மறைவிலிருந்து அவள் என்னென்ன செய்கிறாள் என்று கண்டு வந்து தமக்கறிவிக்குமாறு நியமித்தார்.

உடையவர் நியமனம் பெற்ற அம்மையாருக்கு நியமித்தவர் உடையவர் எனத் தெரியாது. ஏனெனில் அவருடைய உடையவரோ காஷாய தாரி வந்தவரோ வெள்ளைசாத்தி எழுந்தருளி யுள்ளார். வந்த முதலிகளுக்கு அமுது சமைக்க உள்ளே சென்றாள் அம்மையார். பரபரப்புடன் ஆனால் சிரத்தையுடன் சமையலை முடித்தாள்; உடுத்த புடவையைக் களைந்து மற்றொரு சுத்தமான புடவை தரித்தாள். எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று அநுஸந்தித்து, அவர் முன்னம் அவளுக்கருளிய பாதுகையை ஏறியருளப்பண்ணி னாள். அப்பாதுகையின் சந்நிதியிலே பண்ணிய அமுதுகளை ஸமர்ப்பித்து அவற்றைப் பாதுகை களுக்குக் கண்டருளப்பண்ணினாள். பின்னர் வந்து முதலிகளை அமுதுண்ண அழைத்தாள்.

உடையவர் தாம் நியமித்த முதலியை அழைத்து நடந்தவற்றைக் கேட்டார். அவர் 'ஸ்வாமீ! ஸம்பிரதாயத்துக்குகந்தவையாயே இருந்தது. ஆனால் அங்கங்கே கறுத்து நீண்டிருந்த வொன்றை ஏறியருளப் பண்ணி அமுது செய்விக்கக் கண் டேன். ஆனால் அது எம்பெருமான் விக்கிரமாக வும் காணப்படவில்லை'' என்று விண்ணப்பித்தார். உடையவர் அவளை அழைத்து 'அம்மணீ! நீர் போனகம் சமைத்த பின் செய்ததென்ன? என வினவினார். அவள் தயக்கமேதுமின்றி 'ஸ்வாமீ! எம்பெருமானார் முன்னர் அவரது பாதுகைகளை அடியேனுக்களித்திருந்தார். அப் பாதுகைகளை விளக்கு ஏறியருள்வித்து அமுது செய்வித்தேன் என்றாள். உடையவர் அப்பாதுகைகளைக் கொணர்ந்து காட்டும் என நியமிக்க, அவளும் கொணர்ந்து வைத்தாள். உடையவர் அவற்றின் மேல் தம் திருவடிகளைச் சாத்தி அவை பொருந்தி யிருந்தமைகண்டு உளம் மகிழ்ந்து 'அம்மணீ! உம் எம்பெருமானார் இந்த கோஷ்டியில் உண்டோ என்று பார்த்துச்சொல்லும்' என்ன, அவ்வம்மை யார் திருவிளக்கைக் கையிலேந்தி ஒவ்வொருவர் திருவடியையும் முறையே பார்த்து வந்தவள், உடையவர் திருவடிகளை ஸேவிக்கப் பெற்றவாறே திகைத்து நின்று 'ஸ்வாமீ! இவை எம்பெருமா னார் திருவடிகள் போன்றே ஸேவைஸாதிக்கின் றன. ஆயின் இவற்றுக்குரியார்பால் திரிதண்ட காஷாயாதிகள் இல்லை. அதனாலே திகைக்கிறேன்'' என்று விண்ணப்பித்து நின்றாள். உடையவர் அருள் நகை செய்து ''நாமே தான் உம்முடைய எம்பெருமானார் காணும்!'' என்றருளிச் செய்ய, அம்மையார் உடனே கீழே விழுந்து உடையவர் திருவடிகளைக் கட்டிக்கொண்டு, இந்தக் கோலத் துக்கு என்ன காரணம்? திருமேனி இப்படி இளைக்க அடியாது? என்று 'ஓ' வென்று கதறிக் கண்ணீர் வடிக்க, உடையவர் அவளை எடுத்துத் தம் திருக்கரத்தால் அவள் கண்ணீரைத் துடைத்து 'அன்று கோயிலிலே உமக்கருளிய வார்த்தையை நம் செவியில் ஓதும்' என்ன அவளும் நியமனப் படியே அவர் திருச்செவியில் விண்ணப்பிக்க, உடையவரும் உள்ளம் மகிழ்ந்து அவ்வம்மையார் தயாரித்த அமுதுகளைக் கடாட்சித்து முதலிகளை உண்பித்தார். தாம் உத்தமாச்ரமியாதலாலே பெண் சமைத்தது உண்ணலாகாதென்ற நியமப் படி, பாலும் பழமும் கொணரச் செய்து அவற் றைப் பெருமாளுக்கு அமுது செய்வித்து, எஞ்சிய தைத்தாம் ப்ரஸாதப்பட்டு இருந்தார். இரவு நேரமாகிவிட்டபடியால் அவ்வம்மையாருக்கு விடைகொடுத்துப்பின் அனைவரும் கண் வளர்ந் தருளினர்.

—தொடரும்.

கோயில் நிகழ்ச்சிகள்

பிரம்மோத்ஸவ விழா :

4. ஸ்ரீசுரும்பார்குழலியம்பாள்சமேத ஸ்ரீஇரத்தினகிரீஸ்வரர், இரத்தினகிரி என்னும் சிவாயமலை, குளித்தலை வட்டம், திருச்சி மாவட்டம். ... 24-466 முதல் 5-566 வரை

5. ஸ்ரீமாரியம்மன் கோவில் தேவஸ்தானம், இராஜபாளையம். ... 24-4-66 முதல் 4 5-66 வரை